மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XII.	Madras: May 1910.	No-5.
புத்தகம் - கஉ.	சென்னப்பட்டணம்: மேமீ 1910.	இலக்கம்-5.

நமது காலஞ்சென்ற
எ-வது எட்வர்ட் சக்ரவர்த்தி.

தெய்வலோகத்திற்கு இந்திரனைப்போலவும், சத்தியலோகத்திற்குப்பிரம்மாவைப் போலவும், கயிலாசத்திற்குப் பரமேசுரனைப்போலவும் வைகுண்டத்திற்குத் திருமாலைப்போலவும், நிலவுலகத்திற்கு நிகரற்ற மண்டலாதிபதியாய்இப்பூமியில்ஏகதேசம்மூன்றிலொருபங்கைத்தன்ஒற்றைவெண்கொற்றக்குடைக்கீழ்ச்சேர்த்துத் "துன்பம் பயம் மிடிநோய் பகைசோரம்கொலையெய்தாது,இன்பம்பொருள் அறன்யாவையும் இயல்பாதலின்எய்தித் தன்பைங்குடைநிழல்மன்பதைதரியார் முனைமதியாஇன்பந்தனைநிகர்" வாழ்வுஉற்றுஎல்லாதேசத்து அரசர்களுக்கும் திலகம்போல் விளங்கிக்கொண்டிருந்த நமது எட்வர்ட் சக்ரவர்த்தியார் பரலோகப் பிராப்தியடைந்த சேதியை மிகுந்த வருத்தத்துடன் பிரசுரிக்கிறோம். அன்னவர் விசேஷகாலம் க்ரீடத்தைத் தரித்து ராஜ்யபரிபாலனம் செய்யாமற் போனபோதிலும், ஸ்ரீ ராமபக்தர் மனதில் ராமபிரான் உறைகிறாற்போலவும், ஆண்டவனது திவ்ய காருண்யச் செயல்களைச் சிந்திப்பவர்களுடைய மனசைப் பகவான் கவர்ந்துகொள்ளுகிறாற்போலவும், பூததயை, தயாளம், இரக்கம், அன்பு, இன்சொல், வள்ளன்மை முதலிய தன் அனந்தகல்யாண குணங்களினால் பிரஜைகளின் மனதைக் கவர்ந்து அவர்களுடைய இதயத்தில் குடிகொண்டிருந்தனர். இன்னும் குறைந்தது பத்துவருஷகாலம் ராஜ்யபாரத்தைத் தாங்கிச் செங்கோல் செலுத்தக்கூடிய சரீராரோக்கியமும், தேகதிடனும், மனோபலமும், புத்திவன்மையும் உற்றிருந்தபோதிலும், அவரால் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டு, இன்னும் சில முற்றுப்பெறாமல், இருக்கின்ற இத்தருணத்திலே, நம்முடைய சக்ரவர்த்தியார் இறந்துவிட்டதைக்குறித்து நாம் படுந்துயரம் எட்டிலெழுதமுடியாது.

எட்வர்ட் சக்ரவர்த்தியார் உலகத்தை முற்றுமுணர்ந்தவராதலாலும் சுகதுக்கங்களின் இயல்புகளை யறிந்தவராதலாலும், பிரஜைகளின் நோக்கத்தையும் உட்கருத்தையும் எளிதில் தெரிந்துகொள்ளத்தக்க தேர்ச்சியுள்ளவ

ராதலாலும், இங்கிலாந்தில் சுயகாரியங்கள், கடல்களுக் கப்பாலுள்ள தேசங்களுக்கு வேண்டியவைகள், நம்முடைய இந்தியாதேசத்திற்கு அவசியமானவை, இவற்றை நன்கு உணர்ந்து தக்க காரியத்தைத் தக்க காலத்திலே செய்துகொண்டு வந்தனர். மேலும், சகலகலைகளையும் பயின்றவராதலாலும், பூவலம்செய்து ஆங்காங்குள்ள மனிதர்களின் ஒழுக்கங்களையும் ஆசாரங்களையும் அறிந்தவராதலாலும், இதர தேசங்களோடும், இதர மன்னர்களோடும் எளிதில் நட்புகொண்டு, கலகம், போர் முதலிய ஏற்படாமல் சமாதானமா யிருத்தலாகிய மேற்கோளைக் கடைப்பிடித்து ராஜ்யத்திற்கு க்ஷேமகரமும், நன்மையும், சிறப்பும் அதிகரிக்கும்படியாக அரசுபுரிந்து வந்தனர். தம்முடைய மகுடாபிஷேக காலத்தில் இந்தியாவிலுள்ள ஜனங்களுக்கும் சிற்றரசர்களுக்கும் தெரிவித்த சேதியே அவருடைய அன்புக்கும், கொள்கைக்கும் சாக்ஷியாகும்.

இனி, உயிருக்குயிராயும், சகல ராஜ்ய காரியங்களிலும் மந்திரி மதியுடையளாயும், இருந்த அலெக்ஸாண்ட்ரா ராணியாருக்கு நேர்ந்த விபத்தைக்குறித்தும், பிதாவாகவும், நண்பராகவும், அரசராகவும் இருந்த தந்தையை யிழந்த ஜார்ஜ் சக்ரவர்த்தியாரின் துன்பத்தைக் குறித்தும் மிகுந்த துயரப்படுகிறோம். அவர்களுக்கும் ராஜவம்சத்தைச் சேர்ந்த மற்றவர்களுக்கும் கடவுள் மன ஆறுதலைத் தந்து துக்கத்தை மாற்றுவாராக.

ஜார்ஜ் சக்கரவர்த்தி இந்தியருக்கு அனுப்பிய செய்தி.

லார்டு மார்லி சக்கிரவர்த்தியின் ஆக்கினைப்படி கவர்னர் ஜெனரலுக்குப் பின்வருமாறு இந்தச் செய்தியைத் தந்தி மூலமாய் அனுப்பியிருக்கிறார்.

"என் பிதா, மகா ராஜா சக்கிரவர்த்தியின் மரணத்தால் நேர்ந்த துக்கத்தை இந்திய ஜனங்கள் அனைவரும் அந்தஸ்து மதம் முதலிய பேதங்களின்றிப் பாராட்டி அநுதாபமும் விசுவாசமும் காட்டினதை உங்கள் கவர்னர் அனுப்பின செய்தி மூலமாய்த் தெரிந்துகொண்டு ஆழ்ந்த திருப்தியை அடைந்தேன். அவருடைய மரணத்தைக்குறித்து எங்கும் ஒரே மாதிரியாய்த் துக்கம் காட்டப்பட்டதை நினைக்க என் மனம் நெகிழ்கின்றது. அவர் இந்தியாவைப் போய்ப் பார்த்து வந்ததை எப்போதும் அன்புடன் ஞாபகத்தில் வைத்திருந்தார். அதன் க்ஷேமம் எப்போதும் அவர் நினைப்பில் குடிகொண்டிருந்தது.

இந்திய மன்னரும் ஜனங்களும் எனது சிம்மாதனத்தில் வைத்திருக்கும் ஆழ்ந்த விசுவாசத்தை நான் அநுபோகத்தில் அறிந்தவன். அவர்கள், நான் சிம்மாசனம் ஏறினதில் எனக்குச் சேவை புரிந்ததை மனதிற் கொண்டேனென்று அவர்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

என்னுடைய இந்திய ஏகாதிபத்தியத்தின் க்ஷேமமும் சந்தோஷமும் காலஞ்சென்ற சக்கிரவர்த்திக்கும் அவருக்கு முன்னால் மகாராணி சக்கிரவர்த்தினிக்கும் எப்படி அக்கரையும் கவலையுமா யிருந்தனவோ அப்படியே எனக்கும் இருக்கும்."

28 JUN 1910 MADRAS.

அலக்சாண்டிரா ராணியார் அனுப்பிய செய்தி.

"கதியின்றிச் சிதைந்து கிடக்கும் எனது இருதயத்தின் அடியினின்று எமது பிரஜைகளுக்கு என் உண்மையான நன்றியை அறிவிக்கின்றேன். எமது பிரஜைகளிடத்தில் நாம் வைத்திருக்கும் அன்புக்கு அளவில்லை. அவர்கள் எவ்வகுப்பாராயினும், உயர்ந்த வகுப்பாரும் தாழ்ந்த வகுப்பாரும், என்னைத் துக்கம் கவர்ந்துகொண்டு சொல்லொணாத வேதனை பீடிக்கும் இந்தச் சமயத்தில் அநுதாபம் காட்டிவருகின்றனர். என் கணவர் திடீரெனப் பரலோகம் சென்றதால் என்னுடையதை யெல்லாம் நான் இழந்ததுமன்றி, ஜனங்கள் தங்களுடைய ஆப்த நண்பரையும் பிதாவையும் அரசனையும் இழந்துபோயினர். எங்களுக்கு இந்தப் பேரிடி நேரிட்டது அவருடைய திருவுளம். அவருடைய திருவருளால் நாங்கள் அனைவரும் இதைச் சகிக்க அவருடைய துணையைப் பெறுவோமாக. அவர் திருவுளப்படி நடக்கட்டும். இனி எனக்கு இங்குள்ள சில காலம்வரை எனக்குத் தேறுதலும் பொறுமையும் உண்டாகுமாறு நீங்கள் தெய்வத்தைப் பிரார்த்திக்கும்போது என்னையும் நினையுங்கள். என் அரும்புதல்வன் அவனது பிதாவின் நெறியிலேயே செல்வான். அவனை உங்கள் வசம் ஒப்புவிக்கிறேன். அவனை நீங்கள் போற்றி அவன் பிதாவுக்கு நீங்கள் காட்டி வந்த நிஷ்டையை அவனிடத்திலும் காட்டும்படி வேண்டுகிறேன். எனது அருமை மைந்தனும் மருமகளும் இந்த நிஷ்டைக்குப் பாத்திரர்களாய் அதை இழக்காமலிருக்க இயன்றதைச் செய்வார்களென்று அறிவேன்."

விருத்தம்.

1. விண்ணுக்கும் மண்ணுக்கும் பேராய் விளங்கும் தேவேந்திரனென்னும்
கண்ணுக்கினிய துரை பேட்வர்ட் சக்ரவர்த்தி
தண்ணுக்கிசைந்த சந்த்ரோதயசாமி யிந்த
மண்ணுக்குள்ளே யொளித்தான் யானுடர் முகம் வாடியவே.

2. பங்கயக்கண்ணன் தேன் பொழிந்தவாயன் பகை கெடுக்கும் சூரன்
கங்கையினும் மிக்க தூய்யன் ராஜ்யபரிபாலன சமர்த்தன்
செங்கையாற் பிரஜைகட்குச் சாலவுதவும் பண்பினன் நம்மன்னை
நங்கை விக்டோரியாவின் சீமந்தபுத்திரன் சுவர்க்கத்தை யடைந்தனனே.

3. வானில் தூமகேது ஒளிரத்துன்பம் மூளவானவர் கண்ணீர் சோரக்
கானுலவும் மான்போலும் கண்ணினள் கற்பின்திரு
மேனியினள் அலெக்ஸாண்ட்ரா மனங்கலங்க
நானிலத்தோர் தாமேங்க நம்மைவிட்டு ஐயன் அகன்றனனே.

ஜி. தாமோதர முதலியார், பி. ஏ.

ச தா ர ம்.

88-வது பக்கத் தொடர்ச்சி.

சதாரம் :—(புஷ்பாங்கதன் இரண்டு மூன்று அடி சென்றவுடன்) என் பிராணநாதா, ஒரு காரியம் தங்களிடத்தில் சொல்லவேண்டி யிருக்கிறது. என்னை வெறுத்துவிட்டுப் போகிறதுபோல் போய்விட்டு இங்கே திரும்பி வாராமலிருக்கக்கூடாது. நானோ ஒரு பெண்; தனியாக இருக்கிறேனென்று தங்களுக்கு நன்றாகத்தெரியும். இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அதிக சீக்கிரத்தில் காரியத்தை முடித்துவிட்டு திரும்பிவாருங்கள்.

புஷ்பாங்கதன் :—என்னைப்பற்றி யேன் சந்தேகப்படுகிறாய். உன்னைவிட்டுப் பிரிந்துபோகவே, என் மனதிற்கு வருத்தமாயிருக்கிறது; அவ்விதமிருக்க, உன்னை யிவ்விடத்தில் தனிமையாய் விட்டுவிட்டு வாராமலிருப்பேனோ; அதிக நேரம் தான் அவ்விடத்தில் தாமதிப்பேனோ. பயப்படாதே, சீக்கிரம் வருகிறேன்.

சதாரம் :—தாங்கள் நம்முடைய தேசத்துக் கோட்டைவாசலுக்கு வெளியில் எனக்காகக் காத்துக்கொண்டிருப்பதாகச் சொல்லி, என்னை ஏமாற்றிவந்தீர்கள்; அதைப்போல இப்பொழுதும் என்னை நிந்தித்து இவ்விடத்தில் வாராமலிருக்கக்கூடாதென் றுரைத்தேன்.

புஷ்பாங்கதன் :—நான் சீக்கிரம் வந்துவிடுகிறேன். நீ ஒண்டியாயிருக்கிறாயென்று மனதில் அதைரியமடைந்து வருத்தப்படக்கூடாது. நான் போய்வருகிறேன்.

சதாரம் :—நாதா, தங்களையே எப்பொழுதும் தரிசனம் செய்துகொண்டு காலத்தைக் கழிக்கவேணுமென்ற ஆசையைக்கொண்ட யான் எவ்விதம் தாங்கள் திரும்பிவருமளவும் ஒண்டியாய்க் காலத்தைக் கழிப்பேன்? தங்களைச் சதாகாலமும் மனதில் தியானித்துக்கொண்டிருக்கிறதினால், க்ஷண நேரம்கூட தங்களைவிட்டு எவ்விதம் பிரிந்திருக்கிறது?

புஷ்பாங்கதன் :—இதற்கேன், விசனப்படுகின்றனை?

“மங்குலேம்பதி னாயிரம்யோசனை மயில்கண்டு நடமாடும்
தங்குபானுநூ றாயிரம்யோசனை தாமரைமுகம் விள்ளும்
திங்களாதவதற் கிரட்டியோசனையுறச் சிறந்திடுமரக்காம்பல்
எங்கணாயினு மன்பராயிருப்பவ ரிதயம் விட்டகலாரே”

என்றுரைத்திருக்கின்றனர். குமுத புஷ்பமானது இருநூறாயிரம் யோசனை தூரத்திலுள்ள சந்திரனைக்கண்டு மலர்ந்து சிறப்பையடைவதுபோல, யான் தற்காலம் உன்னை விட்டகன்றாலும், என்னை மனதில் நினைத்துக்கொண்டு சந்தோஷமாயிரு. யான் சீக்கிரத்தில் வந்துவிடுகிறேன். தவிர, சந்திரன் மேகங்களால் மறைபட்டிருந்தாலும், குமுதங்கள் அந்தசமயம் வந்தவுடன் புஷ்பிக்கின்றன. அதே மாதிரியாக, தற்காலம் நீ நேரில் என்னைக் காணாமற் போனாலும், என்னை நினைத்துக்கொண்டு சந்தோஷமாயிருக்கலாம். பயப்படாதே, யான் சீக்கிரம் வந்துவிடுவேன்.

சதாரம்:—என்பிராணேசா, தாங்கள் சொல்வதெல்லாம் சரிதான், அதாவது சந்திரன் எவ்வளவு யோசனை தூரத்தில் மறைந்திருந்தாலும், குமுதங்கள் புஷ்பிக்கின்றன; அதேமாதிரியாக தாங்கள் இந்த சவுக்கத்தை விற்று வருமளவும், தங்களை மனதில் நினைத்துக்கொண்டு சஞ்சலப்படாமல் சந்தோஷமாயிருக்க வேணுமென்று உரைத்தீர்கள். நீங்கள் சொன்ன யோசனை நன்றாயிருக்கிறது; அவ்விதமே நடந்துகொள்ளுகிறேன். ஆனால் குமுதபுஷ்பத்தை உதாரணமாக எடுத்துரைத்தவுடன், எனக்கு முன்னிருந்த சந்தேகம் பலத்துவிட்டது.

புஷ்பாங்கதன்:—பிரியசகி, என்ன, சந்தேகம் பலத்துவிட்டதென்கிறாயே; சந்தேகத்தை வெளியிடு, கேட்கட்டும்.

சதாரம்:—தங்களைச் சந்திரனுக்கும் என்னை குமுத புஷ்பத்துக்கும் சமமாக உரைத்தீர்கள். சந்திரனுக்கு எவ்வளவோ குமுத புஷ்பங்கள் இருக்கின்றன. ஆனால் குமுத புஷ்பத்துக்கோ ஒரு சந்திரன் தானிருக்கிறது. அதே மாதிரியாக, குமுதமாகிய எனக்கு பர்த்தா தாங்கள் ஒருவர்தான் என்பது தங்களுக்கு நன்றாய்த் தெரியும். அவ்விதமிருக்க சந்திரனுக்கு ஏராளமான புஷ்பங்களிருக்கிறதுபோல, தாங்கள் வேறே குமுதங்களை மனதில் நினைத்துக்கொண்டு தங்களுக்குச் சொந்தமாகிய இந்த குமுதத்தை முன்போல வெறுத்துவிட்டுப் போகக்கூடாது. தாங்கள் இந்தத் திருஷ்டாந்தத்தைச் சொன்னவுடன், எனக்கு சந்தேகம் அதிகரித்துவிட்டது. அதைத் தங்களிடத்திலும் தெரியப்படுத்தினேன். தயவுசெய்து என்னை க்ஷமிக்க வேணும்.

புஷ்பாங்கதன்:—நீ ஒரு பைத்தியகாரிதான். நல்ல சந்தேகம் உனக்கு வந்தது. குமுத புஷ்பம் எவ்வளவிருந்த போதிலும் அவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு சந்திரனது சிறப்பைப் புகழ்ந்து சொல்லுகிறதில்லை. ஆனால் அவைகளில் அதிக அழகாயுள்ள ஒருபுஷ்பத்தை வைத்துக்கொண்டு தான் சந்திரனைச் சிலாக்கிக்கின்றனர். அந்த ஒரு புஷ்பத்தினால் மாத்திரம் சந்திரன் பெருமையை அடைகிறது. மற்றப் புஷ்பங்கள் இருந்தும் இல்லாததற்குச் சமமாகும். அதேமாதிரியாக, பூலோகத்திலுள்ள உத்தம ஸ்திரீகளுக்குண்டான ஸத்குணங்களெல்லாம் ஒன்று சேர்ந்து உன்னிடத்தில் ஐக்கியமாயிருக்கின்றன. அக்குணங்களின் அவதாரமாகவே நீ வந்திருக்கிறாய். உன்னாலல்லவோ, யான் இப்பெருமையை யடைந்தேன். நீயில்லாமல் போனால் நானிருக்கிற இடமே தெரியாது. ஆகையால் உன்னை யிவ்விடம் விட்டுவிட்டு நான் வராமலிருக்கமாட்டேன். நீ அதைரியப்படவேண்டாம். நீ விசாரப்படாமலிங்கே யிரு; நான் க்ஷணப்பொழுதில் திரும்பி வந்துவிடுவேன். யான் போய்வருகிறேன்; விடை தா.

சதாரம்:—என்பிராண நாதா, தாங்கள் சொல்வதெல்லாம் வாஸ்தவந்தான். என்னால்தான் தாங்கள் இப்பெருமையை யடைந்தீர்களென்றும், நான் இல்லாமற்போனால் தாங்களிருக்கப்பட்ட இடமே தெரியாதென்றும் நன்றாயுரைத்தீர்கள். தாங்கள் அவ்விதம் உரைத்தது வாஸ்தவந்தான். என்னிமித்தமல்லவோ, தாங்கள் இராஜ்ஜியத்தை யிழந்து, பிதாவைக் கானகமனுப்பி, மந்திரியைத் துறந்து, தாங்களும் இக்கானகம் வந்து கஷ்டப்

படும்படியான பெருமையை யடைந்தீர்கள். நல்ல பெருமைதான். இவ்வித மான உத்தம ஸ்திரீகளையல்லவோ விவாகத்திற்கு ஆராய்ந்தெடுக்கவேணும். தவிர, நானில்லாமற் போனால் தாங்களிருக்கப்பட்ட இடமே தெரியாதென்றும் உரைத்தீர்கள். இதுவும் சத்தியந்தான். தாங்கள் இராஜ்ஜியபரிபாலனஞ் செய்து கொண்டிருந்தால், சில மனிதர்களுக்கு தங்களிருப்பிடம் தெரியாமற் போக மார்க்கம் ஏற்பட்டுவிடும். ஏனெனின் அமெரிக்கையாயுள்ள எந்தவிஷயமும், கெட்ட விஷயங்களைப் போல் அவ்வளவு பிரபலமாய் யாவருக்கும் தெரியாம லிருக்கிறது உலகவழக்கமா யிருக்கிறது. பஷ்பாங்கதன் என்ற ஓர் அரசன் மகாபாதகியாகிய சதாரம் என்ற ஒரு ஸ்திரீயை (அய்யோ, ஸ்திரீ என்ற பெயர் அவளுக்குத் தகுந்த தல்ல) மணஞ்செய்து கொண்டு இராஜ்ஜியத்தையும், பிதா, மந்திரிகளையு மிழந்து கானகம் போய்ச் சேர்ந்தாரென்ற விஷயம் யாவரும் நன்றா யறிந்துவிட்டார்கள். நாதா, என்னிமித்தந்தான் தங்களுடைய வரலாற்றை யாவரும் அறிந்து கொண்டனர். சர்வ உத்தமியல்லவோ நான். என்னாலல்லவோ தாங்கள் இப்பெருமைகளை யடைந்தீர்கள். இப்பெருமையை நாமிருவருந் தான் ஒருவருக் கொருவர் சொல்லிக்கொள்ள வேணும். தெய்வமே! இவைகளை மறந்திருப்போமென்றாலும், தற்செயலாய்ச் சில விஷயங்களை பேசுகிறபொழுது இவை ஞாபகத்திற்குவந்து, மனதைப் புண்ணாக்குகின்றன; எங்கள் கதி யிவ்விதமாய் விட்டதே. நாதா தாங்கள் இப்பொழுது என்னிடத்தில் சொல்லிய வார்த்தைகளைக் கேட்கிறபொழுது, தங்களிடத்தில் எனக்கு முன்னிருந்த சந்தேகம் நீங்கி, தாங்கள் இதைவிட்டுப்போனால், திரும்ப வரமாட்டீர்களென்ற நிச்சயம் வந்துவிட்டது. தாங்கள் அவ்விதமிருந்து விட்டால் என்விதியைத் தான் நொந்துகொள்ளவேணும்.

புஷ்பாங்கதன்:—என்கண்மணி, என்பேரில் நீயேன் சந்தேகப் படுகிறாய்? சற்றுமுன், நீயென்னைச் சந்திர னுக்குச் சமமாக ஒப்பிட்டாய். உன் குணங்களைப் பார்க்கிறபோது உன்னைப் பூமிதேவிக்கு ஒப்பிடலாம், அல்ல, உன்னை பூமிதேவியின் அவதாரமென்றே சொல்லவேணும். வானசாஸ்திரப்படி, சந்திரன் பூமியைவிட்டு விலகியோடிப்போக வேணுமென்று எவ்வளவு சிரமப்பட்டாலும், கடைசியில் அதைவிட்டுப்போகமாட்டாமல்பூமியின்சக்தியால் அதை யெப்பொழுதும் சுற்றிக்கொண்டே வருகிறது. அதே மாதிரியாக, பூமிதேவியாகிய உனது சக்தியால், உன்னால் சந்திர னுக்குச் சமமாகச் சொல்லப்பட்டயான், உன்னைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டே யிருப்பேனே தவிர, சந்திரன் பூமியைவிட்டு விலகாததுபோல, யானும் உன்னை விட்டு விலகி எவ்விடம் போகப் போகிறேன்? சந்திரன் சிலசமயத்தில் பூமிக்குச் சமீபமும், சில சமயத்தில் சற்று தூரத்திலும் இருக்கிறது. ஆனால் பூமியை விட்டுப்போகிறதில்லை, அதேமாதிரியாக, யான் இப்பொழுது சற்று நேரம், இந்தச் சவுக்கத்தை விற்று வரும் வரையில் உன்னைவிட்டுப் பிரிந்தாலும், காரியத்தை க்ஷணநேரத்தில் முடித்துவிட்டு விரைவில் உன்னிடத்தில் தான்வந்து சேரவேண்டும். ஆகையால் நீ யென்னிடத்தில் சிறிதேனும் சந்தேகங்கொள்ளாமல், தெய்வத்தைப் பிரார்த்தித்துக்கொண்டு இங்கேயிரு; நான் க்ஷணநேரத்தில் திரும்பி வந்துவிடுகிறேன்.

சுதாரம்:—என்னை மறந்துபோகாமல் சீக்கிரம் வந்துவிடுங்கள். நான் ஒண்டியாயிருக்கிறேனென்று தங்களுக்கு நன்றாய்த் தெரியும். காலதாமதம் வேண்டாம், சீக்கிரம் போய்வாருங்கள்,

28 JUN 1910 MADRAS

புஷ்பாங்கதன்:—நீ ஒன்றுக்கும் அஞ்சாதே; யான் போய்வருகிறேன். (போகிறான்.)

சதாரம்:—(புஷ்பாங்கதன் நாலடி சென்றவுடன்), என் பிராணநாதா, தாங்கள் என்னருகிலிருக்கிறவரையில் எனக்குத் தைரியமிருக்கிறது; என்னை விட்டு இரண்டடிதூரம் போனவுடன், என்னைத்தெரியாமல் துக்கம்வந்துவிடுகிறது; என்துக்கத்தை யாறுதல்செய்ய, தாங்கள் சீக்கிரம் திரும்பிவந்துவிடவேணும். தெய்வமே, என் நாதன் உத்தேசித்துப் போகப்பட்டகாரியம் சீக்கிரம் கைகூடவேணும், நாதா, சீக்கிரம்போய் வாருங்கள். (புஷ்பாங்கதன் போகிறான்). (புஷ்பாங்கதன் பத்தடி நடந்தவுடன்) என்நாதன் என்னைவிட்டுப்பிரிந்து போனவுடன் என் துக்கம் அதிகரிக்கிறது. அவரை யின்னும் ஒருதரம் கூப்பிட்டு அவருடைய முகத்தைப் பார்த்துத் தேறுதலடைகிறேன். (நாதனை அழைக்கிறாள்) என்பிராணநாதா, சற்று இங்குவந்துவிட்டுப்போங்கள்; ஒருவார்த்தை சொல்லவேண்டி யிருக்கிறது. (புஷ்பாங்கதன் திரும்பிவருகிறான்). என்நாதனிடத்தில், அவரைப் பிரிந்ததினால் நான் அடைகிற துக்கத்தை யெவ்விதம் தெரிவிக்கிறது ; வெட்கமா யிருக்கிறதே. அவரிடத்தில், நான் கூப்பிட்டதின் காரணமாக வேறு சாக்குப்போக்குச் சொல்லியனுப்புகிறேன். பிராணநாதா, தங்களிடத்தில் ஒருவிஷயத்தைப்பற்றி இன்னும் ஒரு தவணை சொல்லவேண்டியிருக்கிறது: அதாவது, ஒருவிதத்திலாவது என் பெயரையாருக்கும் வெளியிடக்கூடாது! இதை மாத்திரம் மறக்கக்கூடாது. சீக்கிரம் போய்வாருங்கள்.

புஷ்பாங்கதன்:—நீ சொன்னவற்றை நான் மறக்கமாட்டேன். நான் போய்வருகிறேன். முதலில் இரண்டு அடிபோனவுடன் என்னையழைத்தாய். பிறகு நாலடிபோனவுடன் திரும்பக்கூப்பிட்டாய்; மறுபடியும் பத்தடிசென்றவுடன் என்னையழைத்தாய்; இனியும் கூப்பிடப்போகிறாயோ என்னவோ தெரியவில்லை. யான்போய்வருகிறேன்; பயப்படாமலிரு.

(ஒரு முத்தம் கொடுத்துவிட்டுப்போகிறான்.)

சதாரம்:—இப்பொழுதுதான் எனக்குத் தைரியம் வந்தது. நாதா, சீக்கிரம் போய்வாருங்கள். தெய்வமே! இவர் உத்தேசித்துப் போகப்பட்ட காரியம கைகூடி, சீக்கிரம் திரும்பிவரவேணும். என் நாதன் திரும்பிவருமளவும், இம்மரத்து நிழலில் என்சிரமத்தைத் தீர்த்துக்கொள்ளுகிறேன். நான் பதிவிரதாஸ்திரீயென்பது உண்மையானால் என்நாதனுக்கும் எனக்கும் ஒருகெடுதலும் வராமலிருக்கவேணும். தெய்வமே எங்களைக் கருணையுடன் காப்பாற்றவேணும். நான் சற்று இளைப்பாறுகிறேன்.

(மரத்தின் நிழலில் சற்றுநேரமிருக்க, பிறகு தன்னைத்தெரியாமல் நித்திரையிலாய்விட்டாள்.)

☞ வி. கோபால ஐயங்கார், பி-ஏ.

பெண் கல்வி.

(ஸ்ரீமதி சி. மஞ்சுளாபாய் எழுதியது.)

வித்தையின் மகிமை சொல்லமுடியாததாயிருக்கின்றது. இதுகாறும் சுகமென்று உண்டானதெல்லாம் வித்தையினுற்றான். ஜனங்கள் எதை நிந்தித்தபோதிலும் வித்தையை நிந்திப்பதில்லை.

வித்தையென்றால் அறிவு, அறிவென்றால் அநுபவம். வித்தையின் அப்பியாசத்தினால் மனிதற்கு ஆநந்த முண்டாகிறது. வித்தையின் அருமையை வித்துவான்களன்றி, மற்றவர் அறிவதரிது. வாஸ்தவம்தான். குருடனுக்கு அழகான சித்திரப்படத்தினாலும், செவிடனுக்கு இனிமையான சங்கீதத்தினாலும் என்ன ஆனந்த முண்டாகும்?

வேலைசெய்து களைப்படைந்திருக்கும் சமயத்தில், சுகமாக ஏகாந்தத்தில் காலத்தைக் கழிக்க வித்தை மிகவும் உபயோகமுள்ளதாயும், இன்றியமையாததாயுமிருக்கின்றது.

மனிதன் உலகிற்கெல்லாம் பிரபுவாயிருக்கிறான். அவனுக்கு இப்பிரபுத்துவம் அறிவினால் கிடைக்கின்றது. வித்தையின்றி எக்காரியமும் ஆவது அசாத்தியம். ஆகையால் எல்லாவற்றிற்கும் வித்தை மிக்க ஆவசியமுள்ளதாயிருக்கின்றது.

அறிவானது எங்கும் நிறைந்திருக்கின்றது. அது ஜனங்களுடைய பேச்சு வார்த்தைகளிலும், நடவடிக்கைகளிலும், இருக்கின்றது. இதைவிட நூல்களில் அதிகமாயிருக்கிறபடியால், நூல்களை படிப்போர்களையும் எழுதினவர்களையும் பெரியோர்கள கனப்படுத்துகின்றார்கள்.

அறிவென்றும் வஸ்துவானது விலையற்றதும், அதிக சுகத்தைத்தரத் தக்கது. யாதொரு குறைவுமற்ற சுகசாதனங்கள் ஏராளமாயிருக்கப்பட்ட ஸ்ரீமான்களும்கூட, அறிவை சம்பாதிக்கும்பொருட்டு அபரிமிதமாக பாடுபடுவதாக நூல்களெல்லாம் முறையிடுகின்றது.

புருஷர்களைப்போலவே ஸ்திரீகளுக்கும் வித்தை நிரம்பவும் ஆவசியகரமானது. பெண்களுக்கு அறிவு புகட்டினால் அநர்த்தமுண்டாகுமென்கிற துரெண்ணம் இன்னமும் நம் தேசத்தை விட்டு விலகவில்லை. ஜனங்களுடைய மனதில் இத்துரெண்ணம் நிறைந்திருப்பதைப்பற்றி நினைக்கநினைக்க ஆச்சரியமும் வருத்தமு முண்டாகிறது. வித்தையினால் மனிதனுக்கு நன்மையேயுண்டாகுமேயன்றி, தீமையுண்டாகுமென்று நான் ஒருபொழுதும் சொல்லத்துணியேன்.

பெண்கள் கல்வி கற்பதனால் எத்தகைய அனர்த்தமுண்டாகுமென்று கருதுகின்றனர்களோ, அத்தகைய அனர்த்தம் புருஷர்களாலும் உண்டாகும். ஸ்திரீகளால் உண்டாகும் அநர்த்தங்களைவிட புருஷர்களாலுண்டாகும் அநர்த்தங்கள் தான் அடிக்கடி நம கண்களுக்குத் தென்படுகின்றன. இதைப்பற்றி ஜனங்கள கவனியாமலிருப்பது நிரம்ப விசனகரமான விஷயம்.

அநர்த்தத்தின் பயத்தினால் பெண்களுக்கு அறிவுபுகட்டாமலிருப்பது நியாயமா? இதைப்பற்றி நம்மவர்கள் சற்று யோசிப்பது மிகவும் ஆவசியம்.

தமது சகோதரிகள், பாரியை, பெண்கள், முதலியவர்களுக்கும் பந்துத்துவமுள்ள ஸ்திரீகளுக்கும் கல்வி கற்பித்தாற்றான் மிக்க நன்மையுண்டாகும்.

ஸ்திரீகள் நீசர்களெனக் கருதி அவர்களை அடிமைகளைப்போல் நடத்துவதானது ஓர் பெரிய துர்வழக்கமாயும் பரிதாபகரமாயுமிருக்கின்றது.

புருஷனை உழவனைப்போலவும் பெண்ணை நிலத்தைப்போலவும் வைத்துக்கொள்வோம். நிலமின்றி உழவன் மாத்திரமிருந்தால் என்ன பயன்? அதைப்போல் புருஷன் சிறந்த கல்வி யறிவுள்ளவனாயும் பெண்ஜாதி அறிவற்றவளாயுமிருந்தால் என்ன பயனுண்டாகும்? நம்மவர்களில் பாலிய விவாகம் செய்கிற துர்வழக்கம் இன்னும் விலகவில்லை. அதனால் இத்தேசத்திற்கு எவ்வளவு தீமையுண்டாயிருக்கின்றதோ, அவ்வளவு தீமை வேறெதனாலும் உண்டாகவில்லை. புருஷன் பெண்ஜாதி இருவர்களுடைய மனதும் இசைந்திராததனால், அவ்விருவருள் மனஸ்தாபங்களுண்டாய் இல்லறம் சீரழிகின்றது.

தற்காலம் நம் தேசத்தில் அங்காங்கு பெண்கள் பாடசாலைகள் ஏற்பட்டிருந்தபோதிலும், கற்பிக்கும் முறைகளைப்பற்றி சரிவர கவனிக்கப்படுவதில்லை.

“ஸ்திரீகளுக்கு எவ்விதமான அறிவையும் புகட்டலாகாது. அவர்களுக்கு அறிவுண்டானால், நம்மசுயேச்சைக்கு விரோதமுண்டாய் நமக்கு கௌரவக்குறைவுண்டாகும்” என்று ஸ்திரீகளுக்கு, சாஸ்திராத்தியயனம் செய்ய அதிகாரமில்லை, அவர்கள தங்களது கணவர்களிடம் அடிமையைப்போல் நடக்கவேண்டும், பதிசேவைதான் மோக்ஷத்தைத்தரும்” என்றிவ்வாறான, தமது சௌரியத்திற்குத்தக்கபடி தருமசாஸ்திரங்களை ஏற்படுத்திக்கொண்டு, ஸ்திரீகளை நிரம்பவும் அனாதரிப்பதும், ஸ்திரீகள் துஷ்டர்கள், கபடம் நிறைந்தவர்கள், என்று நிந்தித்து அவர்களை யாதொருவிதமான நற்காரியங்களையும் செய்யவொட்டாமல் பாதிக்கிறார்கள்.

இப்படிச்செய்வது புருஷார்த்தமென்று கருதியபோதிலும், அது, யானைதன்தலையில் தானே மண்ணைவாரிப்போட்டுக்கொள்வதற்குச்சமானமாயிருக்கின்றது.

மனிதனுக்கு வித்தையின்றி அறிவுவருவதில்லை, அறிவின்றி நற்குணங்களமைவதில்லை. அறிவில்லாதாற்கு உண்டாகும் ஸந்தானமும் மந்தபுத்தியுடையதாயிருக்கின்றது.

இத்தேசத்தில் ஸ்திரீகள் விஷயத்தில் புருஷர்களுக்கு இழிவான என்ணங்கள்தான் அதிகமாயிருக்கின்றன! அதனால் துறந்த மனதின்றி, கபடசிநேகத்தை தரிசித்து, தாம்தான் வல்லவர்களெனக் கருதி, தோன்றியவாறெல்லாம் ஸ்திரீகளை நடத்துகின்றார்கள். இப்படி செய்வதனால் ஸ்திரீகளுடைய மனதிற்கு அமைதியிருப்பதில்லை. சதாகாலமும் தாசியவிருத்தியினாலும், அஞ்ஞானத்தினாலும் அவர்களுடைய மனம் மலினமடைந்து உற்சாகமற்றதாயும், அசத்தியம் நிறைந்ததாயு மிருக்கின்றது.

இவ்வாறு மலினமடைந்த மனதில் தருமசிந்தை ஈசுவரபக்தி முதலிய நற்குணங்கள் எப்படியிருக்கும்? தற்காலம் சில சுதேசாபிமானிகள் சபைகளில் சென்று "நம்மதேசம் துர்தசையிலிருக்கின்றது, அதை உயர்ந்த தசைக்குக்கொண்டு வரவேண்டும். அது இன்னவிதத்தினால் செய்யவேண்டும். முன்பு இத்தேசத்தில் பெரும் பராக்கிரமம் படைத்த ஜனங்களிருந்து அவர்கள் சுதந்திரமுடையவர்களா யிருந்தார்கள். நாம் பராதீனர்களாயிருந்து ஜனங்களுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறோம், இனி எல்லோரும் ஒருமனதுடன் சுதேச நன்மைக்காக பாடுபடவேண்டும்? என்றிவ்வாறாக மேகநாதம்போல் கர்ஜித்து எல்லாதிசைகளும் அதிர்ச்சியடையும்படி செய்கின்றார்களேயன்றி, அதனால் எதாவது பயனுண்டா? இல்லை. அவர்களுடைய வாய்மையெல்லாம் அவ்விடத்திலேயே தங்கிவிடுகின்றது. கேட்பவர்களெல்லோரும். ஒருகாதினால்கேட்டு மறுகாதினால் வெளியில் விட்டு பேசிய பேச்சுகளில் எங்கேயேதாவது தமக்கு ஒட்டிக்கொண்டு விடுகின்றதோவென்று, பயத்தினால், வஸ்திரங்களையெல்லாம் நன்றாக உதறிவிட்டு இருப்பிடம் செல்லுகிறார்கள்.

இல்லறத்தில் ஒவ்வொரு காரியத்திற்கும் புருஷர்களுக்கு, ஸ்திரீகளுடைய உதவி வேண்டியதாயிருக்கின்றது. அறிவில்லாத மாதர்களைக் கட்டிக்கொண்டு வெளியிற்சென்று களைத்துவரும் புருஷர்களுக்கு, இல்லறத்தையும் தாமே கவனிக்கவேண்டியதாயிருக்குமானால், அதனால் பற்பலதீங்குகள் விளைவதுமல்லாமல் பொதுநன்மைமுதலிய நல்ல விஷயங்களைப்பற்றி யோசிக்க புருஷர்களுக்கு ஒழிவு கிடைக்கமாட்டாது. அறிவுள்ள மனைவியாயிருந்தால், இல்லறத்தையும் சிறப்புடன் நடத்தி, ஒழிவுநேரத்தை வீணே கழிக்காமல், கணவனுக்கு உதவியுள்ளவேலைகளைச் செய்வதுமல்லாமல், பொதுநன்மைக்குவேண்டியும் கூடி பாடுபட முயலுவாள்.

புருஷர்கள் கூடியவரையில் பெண்கல்வியின்கண் கவனத்தை செலுத்தி, பெண்களுக்கு நல்லறிவு புகட்டுவார்களாகில், நிகரற்ற சுகத்தை அடையக்கூடும். அதற்கு நம் மாதர் மனோரஞ்சினி கூடியவரையில் உதவி புரிந்துவருகிறபடியால் எல்லோரும் அவளை அனபுடன் ஆதரிப்பார்களாக!

ஜப்பான் இராஜகுடும்பம்.

1. மிக்காடோ எப்படிக் காலம் கழிக்கிறார்.

ஜப்பான் தேசத்துச் சக்ரவர்த்திக்கு மிக்காடோ என்று பெயர். அவர் காலை 6-மணிக்கு எழுந்து, எழுமணிக்குள் பிரதம போஜனம் முடித்துக் கொள்ளுகிறார். வைத்தியர் ஒன்பதுமணிக்கு வந்து பார்வையிட்டுப் போனதும் பத்துமணிக்குள் அரமனை சம்மந்தமான சொந்த கிருத்தியங்களையும் கிரகக்ருத்தியங்களையும் முடித்துவிடுகிறார். பின் பொதுக் காரியங்களுக்குத்

தான் கடமையை செலுத்த புஸ்தகசாலைக்குச்சென்று பனிரண்டுமணிவரையிலும் வேலைசெய்கிறார். அங்கேயே பகல் போஜனம் தயாராகிறது. சாயங்காலம் ஐந்து ஆறுமணிவரையில் அங்கே வேலையாயிருக்கிறார். இளவயதில் அவருக்கு வில்வித்தை, வெளி விளையாட்டு இவைகளை அப்பியாசிக்க வெகு பிரியம். ஆனால் இப்போது வரவர அவர் யார்க்ஷயர் நாய்க் கூட்டத்துடன் சோலையில் உல்லாசமாய் உலாவுவது அருமையாய்விட்டது. சாமர்த்தியமாய்ச் செய்துள்ள மரக்குதிரையின்மீது சவாரிகள் செய்து குதிரைச்சவாரியில் உண்டாகும் பலனையெல்லாம், இதைக்கொண்டே அடைந்து சந்தோஷப்படுகின்றாராம். இக்காரியாதிகளையெல்லாம் முடித்துக்கொண்டதும் ஸ்நானம் செய்து போஜனமருந்தி இலக்கண இலக்கியம் வாசித்தபின் நன்றாய் நித்திரை செய்வாராம்.

மிக்காடோ சேனைத்தலைவர் உடை தரித்துக்கொண்டு தான் இராஜ்ய காரியங்களை நடத்துகிறார். கச்சேரிசெய்தபின் சுதேசியத்துணியாற் செய்த சாதாரண உடை தரித்துக்கொள்வதும் இரவில் சுதேசிய வெள்ளை கவுன் போட்டுக்கொள்வதும் வழக்கம். மஹாராஜா ஒரு ஆடையை ஒரு தடைவைக்கதிகம் போடுவதில்லை. அதைக் கழற்றினதும் தர்பார் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுத்துவிடுவார். அவர்கள் அதை மதிப்பற்ற குலதனம் என்று ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து வைக்கிறார்கள். அரண்மனைக்குள் சமுகத்துக்கு வேண்டியவற்றைக் கவனிக்க ஒரு தையல்கடை தனியாய் இருக்கிறது. தையற்காரர்கள் வெள்ளை ஆடை போட்டுக்கொண்டு வேலைக்குச் செல்லவேண்டும். அப்படிச் செல்லுவதற்கு முன்னால் ஸ்நானபானாதிகள் செய்து சுத்தமாய்ப் போகவேண்டும்.

---

2. இராஜ சுயம்பாகம்.

காலையிலும் மத்தியானத்திலும் சாப்பாடு தினுசுதினுசாக ஐந்தாறு தடவை பரிமாறவேண்டும். இரவில் ஏழுதடவை. உச்சிப்பொழுதும் சாயங்காலமும் கோழிகுஞ்சு சூப் சாப்பிடுவார். அன்னிய நாட்டுப் பதார்த்தங்களை விரும்புகிறதில்லை. ஆனால் வெறும்காய்கறிகள் செய்தால்பிரியம். உப்பு கலந்து பக்குவப்படுத்தின மீன்மேல் அதிகப் பிரியமிருந்தாலும் அதில் ஒரு துண்டு இரண்டு துண்டுதான் சாப்பிடுகிறது வழக்கம். அநேக அரமனை உத்தியோகஸ்தர்களுக்கு ருசி பார்த்துக்கொடுப்பதே ஜீவனோபாயம். ஜப்பானியர்களுக்கு உள்ள வழக்கம்போல் மிக்காடோவும் சாப்பிட மெருகுள்ள-நம்போல் கையால் அல்ல—தந்தக் குச்சிகளைத் தான் உபயோ க்கின்றார். ஆனால் இவருக்கும் மற்றவர்களுக்கும் என்ன பேதமென்றால் இவர் 9 அங்குலக்குச்சியும், இராஜகுமாரரும் இராஜகுமார்த்திகளும் 8 அங்குலக்குச்சியும் மற்றவர்கள் இவற்றிலும் குட்டையானவைகளையும் உபயோகிப்பதே. சமுகத்திற்குச் செய்யும் குச்சிகளை வெகு பக்தி சிரத்தையாய்ச் செய்கிறார்கள். மிக்கடோவுக்கும் மற்றவர்களுக்கும வேறுஆயுதம் செய்பவனும் மிகச் சுத்தமாயிருக்கவேண்டும். அவைகளை அவன் செய்யும்போது குடும்பக்கவலையை முற்றும் நீக்கவேண்டும். உயிர்த்தோழரிடத்திலும் பேசக்கூடாது. பக்தி சிரத்தையாய் ஈஸ்வரத்தியானம் செய்வதுபோல் மனதை அதிலேயே செலுத்தி நாள் ஒன்றுக்கு சுமார் 50-ஜதை செய்துமுடிக்கவேணும்.

சக்ரவர்த்தி, சக்ரவர்த்தினி இருவருக்கும் பாலைக்கண்டால் வெகு பிரியம். மிக்காடோவுக்கு பெனுனு, பீச் என்ற பழங்களின்மேல் ஒருவித வைபத்தியம். முன் எதும் குடிப்பதுண்டு; ஆனால் தற்காலம் இறக்குமதியாகும் சத்திலாரோஸ் என்னும் பரிமணமுள்ள திராக்ஷரசத்தைப் பானம் பண்ணுகிறார். மிக்காடோவுக்கு கடிகாரம்,பட்டாக்கத்தி இவைகளின்மீது பிராணன். சக்ரவர்த்தினிக்கு மூன்று விஷயத்தில் மிக்க ஆனந்தம். கவி கட்டுவதிலும், ஹயாமா அரமனையண்டை கடலோரம் உலாவப்போவதிலும், தர்மகாரியம் செய்வதிலுமாம். ஒஷி ஹித்தோ என்ற பட்டத்துக்குரிய இளவரசர் மிக்காடோவுக்கு மூன்றாம்பிள்ளை. 1879௵ ஆகஸ்டுமீ 31௳ ஜனித்தார். மூத்த குமாரன் 1887-ல் இறந்தபின் பட்டத்துக்கருகர் என்று இளவரசுபட்டம் சூட்டப்பட்டது. அன்னிய பண்டிதர்களைக்கொண்டு ஜப்பான் சீன முதலியவைகளில் கல்வி கற்பித்திருக்கிறார். சக்ரவர்த்தி தானே மேல் பார்த்துவந்தார். இளவரசர் சிறுவயதினரா யிருக்கும்போது மிதியடி போட்டுக்கட்ட ஆள் இருந்தாலும் தானே கட்டிக்கொள்ளவேண்டும் என்று ஆக்கியாபித்திருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

☞ சி. சிதம்பர உபாத்தியாயர்.

சர்வஜித்.

24-வது அத்தியாயம்.

சென்ற நாற்பத்தெட்டு மணிகளுக்குள் நடந்தேறிய சம்பவங்களையே குறித்து யோசித்துக்கொண்டு ஸர்வஜித் இருட்டறையில் தனியாக இருந்தான்; பக்கத்தில் வைத்திருந்த ரொட்டியையும் தண்ணீரையும் விரலாற்கூட தொடவில்லை. இரவு மணி பதினொன்று அடிக்க, இருட்டறையின் கதவு திறக்கப்பட்டது. பிரபு அநங்கன் வந்து முன் நின்றான்.

அநங்கனது வருகையை நமது கதாநாயகன் சிறிதும் எதிர்பார்க்கவேயில்லை; எதற்காக வந்திருக்கக்கூடுமோ வென்றறிய, மேஜையில் மங்கலாய் எரிந்துகொண்டிருந்த விளக்கின் பிரகாசத்தைக் கொண்டு பிரபுவின் முகத்தை உற்று நோக்க, அம்முகம் குழப்பத்தால் தத்தளித்துக் கொண்டிருப்பதாகத் தெரிந்தது. தன்னை ஸர்வஜித் பார்க்கிறதாகக் கண்டவுடன், பிரபு அநங்கன் கூடியமட்டும் முகத்தைத் தெளியச்செய்து சொல்லுகிறான். "இளைஞனே, நான் இங்கு வந்ததற்கு நீ ஆச்சரியப்படக்கூடியதுதான், ஆயினும் உனது அநுகூலத்தைக் கருதியே வந்திருக்கிறேன். அது சற்று நேரத்திற்குள் நன்கு விளங்கும்" எனவே, நமது சிறுவன், 'நான் தங்களுடைய நல்ல எண்ணத்திற்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன். தாங்கள் சொல்வதைக் கேட்க ஆவலாய் இருக்கிறேன்" என்றான்.

"என்னை இங்குஅனுப்பிவித்ததுசீமாட்டி லீலாவதி" என்று அநங்கன் சொல்ல, ஸர்வஜித் பரவசனாய், "அப்படியா? என்னைக்குற்றவாளி யல்ல

வென்று நினைக்கிறாளா? அதுதான் எனக்குத் தெரியவேண்டியது" என்று ஆவலுடன் கேட்டதற்கு, அநங்கன், "சற்றுப்பொறு, சற்றுப்பொறு; அவசரப்படாதே. நான் சொல்லுவதை சாவதானமாய்க்கேள். லீலாவதி உன் நன்மையையே கோரிக்கொண்டிருக்கிறாள். அவளது வேண்டுகோளுக்கிசைந்து தான் உனக்கு அவளிடமிருந்து ஒரு கடிதம்—".

"கடிதமா? எங்கே? எங்கே? முதலில் அதைக் கொடுங்கள், பிறகு மற்ற விஷயங்களைக் குறித்துப் பேசுவோம்" என்று சொல்லி மேலங்கிப் பையிலிருந்து எடுக்கப்பட்ட கடிதத்தை அநங்கன் கையிலிருந்து பரபரப்புடன் வாங்கி உடைத்துப் படித்துப்பார்க்க, இதுவரையில் பரவசத்தால் மின்னிக்கொண்டிருந்த ஸர்வஜித்தின் முகம்மங்கிவிட்டது. தலைகுனிந்தான். ஏனெனில் கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

ஸர்வஜித், விதியை யாரால் வெல்லமுடியும்? நமது தலைச்சுழி நல்ல சுழியாய் இருந்தால் இவ்வளவு இடுக்கண்களும் அவமானங்களும் ஆபத்துக்களும் எப்படிவரும்? நாம் அதிர்ஷ்ட ஹீனர்களென்பதை நடந்தேறிவரும் விருத்தாந்தங்களெல்லாம் வற்புறுத்திக் காட்டவில்லையா? நாம் ஒருவர்க்கொருவர் பாராட்டிவந்த நேசம் தெய்வத்திற்கே பொறுக்கவில்லை. இக்காரியத்தில் என் தகப்பனுக்கு விரோதமாய் நடந்ததைக் குறித்து விசனிக்கிறேன். பிரபு அநங்கரை விவாகஞ்செய்துகொள்வதாக வாக்குறுதி கொடுத்துவிட்டேன். இனி நாம் இருவரும் கண்டு வந்த கனவை மறப்போமாக. ஆயினும், இப்பொழுது உன்னைச் சூழ்ந்திருக்கும் அபாயத்தில் உன்னைவிட எனக்கு இஷ்டமில்லை. இக்கடிதத்தைக் கொடுக்கும் பிரபு அநங்கர் உனக்கு நல்ல யோசனைகளைச் சொல்லுவார்; அவைகள் என் சம்மதத்தை ஏற்கனவே அடைந்திருக்கின்றன. அவர் சொல்லுகிறபடி நீ நடந்துகொள்ள வேணுமென்று உன்னை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இனி உனக்கும் எனக்குமுள்ள எவ்விஷயமும் முடிவடைந்துவிட்டதென்பதைத் தவிர வேறொன்றையுஞ்சொல்ல இடமில்லை. பல வருஷங்கள் கழித்து எப்பொழுதாகிலும் நாம் நேரில் சந்தித்தால், இந்நாட்களை நாம் மறந்திருப்போமென நம்புகிறேன். உனது நன்மையையே தேடுகிற, லீலாவதி".

கடிதத்தைப் படித்தான். சித்த பிரமைகொண்டவன்போல வெறுண்டு விழித்தான். உயிரே தன்னைவிட்டு நழுவிச்செல்லுவதுபோலிருந்தது; தலை கிறு கிறென்று சுற்ற ஆரம்பித்தது. மயங்கிவிழ இருந்தவன் மனதை சடிதியில் திடஞ்செய்துகொண்டு லீலாவதி தான் எழுதினாளோவென்று மறுபடியும் கடிதத்தைப் பார்த்தான், சந்தேகமில்லை. லீலாவதியின் எழுத்துத் தான். நம்பிக்கையனைத்தையும் ஒரே அடியாய் நசுங்கும்படியான இக்கடிதத்தைலீலாவதி யெழுதுவது விந்தையினும் விந்தையாயிருக்கிறதே! யாது காரணமோ வென்று யோசிக்க, "ஐயோ, என்னை குற்றவாளி யென்று நினைக்கிறாள்போலிருக்கிறது; இல்லாவிடில் இப்படி எழுதமாட்டாள். அவளை ஒரு நிமிஷம் நான் பார்க்கவேணும், நீங்கள் என் நன்மையைக் கருதிவந்ததாகச் சொன்னீர்கள்—"

"ஆம், ஆம், அதற்குச் சந்தேகமில்லை. மனதை மாத்திரம் சாந்தஞ் செய்துகொள்" என்று அநங்கன் சொல்ல, ஸர்வஜித், "சாந்தமா? பிரபுவே,

புயலடித்துக் கொந்தளித்துக் கொண்டிருக்கிற சமுத்திரத்தை சாந்தமா யிருக்கச்சொன்னாலும் ஒருக்கால் அது கேட்கக் கூடும், ஐயோ, லீலாவதியை ஒரு நிமிஷம் நான் பார்க்கக் கூடாதா? ஒரே ஒரு நிமிஷம் பிரபுவே, ஒரே ஒரு நிமிஷம். நான் பேசும்போது தாங்களும் பக்கத்தில் நில்லுங்கள். நான் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையையும் கேட்டுக்கொள்ளுங்கள். ஒரே ஒரு நிமிஷம் பிரபுவே, தாங்கள் என் நன்மையைக் கோரி வந்திருப்ப துண்மை யாயின் இந்த தயவு எனக்குச் செய்யவேண்டும் என்று மிகவும் கெஞ்சினான்.

"முடியாது, முடியாது, நீ தெரியாத்தனமாய் பேசுகிறாய். நான் உனது வேண்டிக்கேட்டலுக் கிசைந்தால் புஷ்யமித்திரர் என்ன நினைப்பார்? நான் இங்கு வந்திருப்பது அவருக்குத் தெரியாது. அவருடைய பிள்ளையைக் கொன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிற—"

"எவ்விதம் என்னைக் குற்றஞ் சாட்டலாம்? தீர விசாரியாமல் என்மேல் எப்படி பழிசுமத்தலாம்? என்னைக் கொடிய பாதகனென்று சொல்வது எப்படி நியாயமாகும்? என்னுடைய முகாந்திரங்களை விசாரியாமல் என்னை எவ்விதம் இந்த இருட்டறையி லடைக்கலாம்?—, என்று படபடத்து ஸர்வஜித் சொல்லுகையில், அநங்கன், "நீ சாந்தமா யிருக்கிறாயா, அல்லது நான் இங்கு விட்டுப்போய் விடட்டுமா?" வென்று கடுங்கோபத்துடன் சொல்லவே, ஸர்வஜித், "சரி, நீங்கள் சொல்லவந்ததைச் சொல்லுங்கள். இனி என்ன வந்தாலும் வரட்டும். நான் இதைக் காட்டிலு மதிகமான கிலேசத்தை அனுபவிக்கப் போகிறதில்லை. லீலாவதியின் பொருட்டு எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டிருந்தேன். அவளுடைய கடிதம் நம்பிக்கையை வேரோட னறுத்துவிட்டது; இனி நான் இறப்பதைத் தவிர எனக்கு நல்லது என்ன விருக்கிறது" என்று ஏக்கத்துடன் சொல்ல, பிரபு அநங்கன் அப்படியல்ல, நீ உண்மையில் லீலாவதி யிடத்தில் பிரியமுள்ளவனா யிருந்தால் அவளது வேண்டுதலின்படி நடக்கத் தயங்கக்கூடாது. நான் சொல்லுகிறபடி நீ செய்யும்படி கேட்கிறாள். நான் சொல்லுவது யாதெனில், நீ இக்ஷணமே இவ்விடம் விட்டு அந்நியதேசம் ஓடிவிடவேண்டியது—"

"என்ன? ஓடிவிடுவதால் நான் குற்றவாளிதான் என்று எல்லாருக்குந் தெரியும்படி காட்டிக்கொள்ளவா? தங்களுடைய யோசனை மிகவும் நன்றாயிருக்கிறது! நான் தூக்குண்டு இறந்தாலும் இறப்பேனேயொழிய பயந்து ஓடிவிட கொஞ்சமும் சம்மதியேன்," என்றான் ஸர்வஜித்.

அதற்கநங்கன், தான் சொல்லவந்தயோசனை லீலாவதியின் முழு சம்மதத்தை யடைந்திருந்தபடியால், அதை யலக்ஷியஞ் செய்வது லீலாவதியை யலக்ஷியஞ்செய்வதாகுமென்றும், ஸர்வஜித் மெய்யாகவே குற்றவாளியில்லை யென்று வைத்துக்கொண்ட போதிலும், அவனுக்கு பிரதிகூலமாகக்காணப்படுகிற அநுவிஷயங்களெல்லாம் எந்த நியாயாதிபதியையும் குற்றவாளி யென்றே சொல்லத்தூண்டுமென்றும், ஆகையால் மரணதண்டனையிலிருந்து தப்புவது முடியாதகாரியமென்றும், ஒரே மூர்க்கத்தனமான பிடிவாதமாய் ஸர்வஜித் மரணத்தையடைந்தாலு மடைவேன் அங்கு விட்டகலுவதில்லையென்று சொல்லும் பக்ஷத்தில், லீலாவதியை நேசிப்பதாகச் சொல்லுவதனைத்தும் பாசாங்காகுவதோடுங்கூட, தமையனுடைய மரணத்தால்

ஏற்கனவே அடைந்திருக்கிற வருத்தத்தோடு இதையுஞ் சேர்த்தால், சில தினங்களுக்குள் அவள் பைத்தியத்தையாவது மரணத்தையாவது அடைவதற் கையமில்லையென்றுஞ் சொல்லவே, ஸர்வஜித் தனக்கிஷ்டமில்லாத காரியத்தைச் செய்ய கடினத்தோடு மனதை யுறுதிசெய்துகொண்டு சொல்லுகிறான், "பிரபுவே, எனக்கு கொலையாளியென்று அபகீர்த்தி வந்தாலும் வரட்டும், என்னை லீலாவதி திரஸ்காரஞ்செய்தாலுஞ் செய்யட்டும். அவளை நானலக்ஷியஞ்செய்ததாக வேண்டாம், என்னாலவளுக்குத் தீங்கும் வரக்கூடாது. அவளுக்காக இக்காரியத்தைச் செய்கிறேன். வேறொருவருக்குமில்லை" யென்றுசொல்லி யெழுந்தான். எங்கு அவன் மன உறுதிமாறிவிடுமோ வென்றஞ்சி அநங்கனும் "புறப்படு உடனே. உனக்காகக் குதிரைகள் காத்திருக்கின்றன. நீ இத்தேச எல்லையைத்தாண்டி இங்கிலாந்துக்கோடிவிடு. சிறிது தூரம்வரையில் உனக்குத்துணையாக இரண்டு குதிரையாட்கள் வருவார்கள்" என்று சொல்ல, சர்வஜித், "எனக்குத் துணை வேண்டாம், நான் தனியாகப்போக தைரியமுண்டு" என்று சொல்ல, "அப்படியாகில், உனக்குச் சிறிதுதூரம் வழிகாட்டவருவார்கள். அதற்கப்புறம் அவர்கள் வருவது உனக்கிஷ்டமில்லாவிடில் அவர்களை யனுப்பிவிடலாம்." என்றான். ஆனால் உண்மையில் அநங்கன் அவ்விரு குதிரையாட்களிடத்திலும் ஸர்வஜித் நேரே இங்கிலாந்துக்குப்போகத்தவறினால், அவனைக்கூசாமல் வெட்டிக் கொன்றுவிடும்படி தாக்கீது செய்திருந்தான்.

இப்படிப் பிரபுவும் ஸர்வஜித்தும் வெளியே வந்து, மூன்று குதிரைகளிருந்த இடத்தை யடைந்தார்கள். அவைகள் புறப்படத்தயாராய் ஜேணங்களோடிருந்தன. அவைகளி லொன்றின்மேல் ஸர்வஜித் ஏறினான். ஏறினவுடன், அநங்கன் "உனது சிலவுக்காக இந்தப்பையில் வேண்டுமான பணமிருக்கிறது; பெற்றுக்கொள்," என்று சொல்ல, ஸர்வஜித், "பிரபுவே, எனக்கொருதம்படிகூட வேண்டாம். தங்களிடுப்பில் தொங்கிக்கொண்டிருக்கிற கத்தியை மாத்திரந்தாருங்கள். அதைக் கொண்டுதான் இனி என் பிழைப்பு" என்று சொல்லி வாளுக்காகக் கையைநீட்ட, அநங்கன் அதைக்கொடுக்கத் தயங்கினான். ஏனெனில், ஸர்வஜித் ஆயுதபாணியாயிருந்தால், தான் குதிரையாட்களுக்கிட்ட உத்திரவு நிறைவேறுவது கடினமாகுமென்று பயந்தான். ஆயினும், ஸர்வஜித் மனதில் சம்சய முண்டாகாமலிருக்கவேண்டுமானால், தன் வாளைக் கொடுப்பதை தவிர வேறு வழியில்லையென்றுகண்டு, மனதில்லாமல் அதைக் கொடுத்தான். இதற்குள்ளாக மற்ற இரண்டு குதிரையாட்களும் குதிரையேறித் தயாராயிருந்தார்கள். கத்தியை வாங்கிக்கொண்டதும் ஸர்வஜித் அநங்கனைப்பார்த்து, "நான் போயவருகிறேன் சீமாட்டி லீலாவதியினிஷ்டப்படி நடக்கிறேன். தாங்கள் அவளிடத்தில் நான் சொன்னதாகச் சொல்லவேண்டியது யாதெனில்—" என்று சொல்லும்போது அதிகரித்து வந்த துக்கத்தால் நெஞ்சடைத்துக்கொண்டது. இனி அங்கு ஒரு நிமிஷங்கூட நின்றால் அநங்கனுக்கு முன் வெடித்துக்கொண்டு அழுகை வரும்போலிருந்ததால், சொல்லவந்ததைக்கூட முடிக்காமல் குதிரையைத் தட்டிவிட்டுப் பறந்து போய்விட்டான். மற்ற இரண்டாட்களும் அவனைத் தொடர்ந்து சென்றார்கள்.

ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர், பி. ஏ.

நரேந்திரபுர நங்கை.

(முன்தொடர்ச்சி).

நான்காம் படகுக்காரன் :—" அடேடே! இந்தபொண்ணு எம்மாத்தம் எலக்கணமாபேசுது! இது பேசராப்லே நம்பளாலே பேசமுடியுமா? பார்வதி இவர்கள் பேசுவதையே கவனித்துக்கொண்டிருந்தாள்.

இரண்டாம் படகுக்காரன் :—" இது நம்பளையே சொம்மா பாக்குதே! இதுக்கு நம்ப பேஸ்ரது தெரிமா?

பார்வதி குப்பனென்னு மிரண்டாம் படகுக்காரனைக் காண்பித்து :— இவனுக்கேன் மூக்குக்குத்தாமல் குப்பனென்ற பெயர் வைத்தீர்கள் ?" என்று கேட்டபோது.

குப்பன் :—நீ சொல்றது சரி? ஆனுக்கா, மூக்குக் குத்தற வயக்கம் எங்ளுக்கில்லே தெரிஞ்சிகினியா ?"

அவர்கள் ஏறியிருந்தது மீன்படகாதலால் நான்காம் படகுக்காரன் :— " இன்னிக்கு நம்புளுக்கு எவளோ மீனு ஆப்டுது பத்தியா. கடுவகூட ஊட்டுக்கு வந்துட்டோம".

இவர்கள் போகவேண்டிய இடத்திற்கு அருகாமையிலிருந்த ஓர் ஆலமரத்தடியில் குழந்தையொன்றை இடுப்பில் வைத்துக்கொண்டு நின்றிருந்த ஒருபெண்ணைக் காண்பித்து இரண்டாம் படகுக்காரன் :—நம்போ செங்காளம்மே மொட்டெ கொயந்தையே வெச்சிகினு நிக்றா. அதோபார்" என்று மூன்றாம் படகுக்காரனை நோக்கிச் சொன்னான்.

இதற்குள்ளாகப் படகுங் கரை சேர்ந்தது? யாவரும் படகைவிட்டுக் கீழே இறங்கினர்.

இதுதான் முத்தூரென்னுங் கிராமம்! அவர்கள் கரை சேர்ந்ததும் அவர்கள் கூட்டத்தார் யாவரும தத்தங் குடிசைகளிலிருந்து வெளிப்பட்டு:-

" அப்போ! இவள் அயகா இருக்ற இந்த பொண்ணு ஆரு?" என்று குப்பனைக் கேட்டான் ஒருவன்.

தலையை யசைத்து, " நல்லா இருக்குதுடா!" என்றாள் ஒருத்தி.

சிறிது நேரஞ்சென்றதும் அவர்கள் பார்வதியை ஒரு செம்படவனிடங் கூட்டி நாம் முன்பே சொல்லியிருக்கிற அப்பிராமணன் சத்திரத்திற் கனுப்பிவிட்டு, தாங்கள் பெண்சாதிப் பிள்ளைகளோடுண்டு, தாம்பூலத்துடன் புகையிலையுமருந்தி, யாதொரு கவலையுமின்றி, மறுபடியும் தத்தம் தொழிலுக்குப்போகப் புறப்பட்டனர். பார்வதியுஞ் சத்திரஞ் சேர்ந்தாள்.

அச்சத்திரத்துப் பிராமணன் பார்வதியை நோக்கி "நீ யாரம்மா?" என்றான்.

பார்வதி :—நான் சிவநேசமுதலியார் புதல்வி.

பிராமணன் :—அவரெங்கிருப்பது ?

பார்வதி :—" சத்தியபுரி "

பிராமணன் :—நீயேனிங்குத் தனியே வந்தாய் ?" என்று கேட்க, பார்வதிக்குக் கண்ணீர் வடித்துக்கொண்டே தன் வரலாற்றை ஆதியோடந்தமாய்ச் சொல்லிமுடித்தாள். அதைக்கேட்டப் பிராமணன் அவள்மீது பரி

தாபப்பட்டு அவளுக்குப் பசிதீர அன்னமிட்டான். பார்வதிப் போஜனமுண்டதும் நடந்துவந்த அலுப்பினுல் அச்சத்திரத்துத் திண்ணையின்மீது நித்திரைச் செய்யலானுள்.

நான்காமத்தியாயம்.

பார்வதியின் உந்நத பதவி.

"ஐயோ! என்ன செய்வேன் என்னை என் மகளிடமிருந்து பிரித்துவிட்டவ னெப்படுபாவியோ. என்னைக் கைப்பிடித்திழுத்த இராமநாதனே இவ்வேலைச் செய்திருக்கவேண்டும். பார்வதி என்னருமைக் கண்ணே! நீ எப்படியிருக்கிருயோ! வழி தெரிந்தாலும் வீட்டுக்குப் போவேனே. என் புருஷன் எப்படி யிருக்கின்ருரோ? ஈசா! ஈசா! எனக்கு மென்குலத்திற்கும் என் புருஷனுக்கும் அபகீர்த்திதானே. அவ்வூரார் யாவரும் நான் வெளியேறிவிட்டதாக என்னைத் தூஷிப்பார்களே! என்ன செய்வதற்கு? உண்மையில் யானப்படிப்பட்ட துற்குணமுடையவளன்று" என்று ஒரு ஸ்திரீ சத்தியபுரியிலுள்ளக் கானகமொன்றில் தனியேயிருந்து விசனப்பட்டுக்கொண்டிருந்தாள்.

"வீட்டுக்குப் போகலாமா?" என நினைப்பாள்.

"ஐயோ! வழியொன்றுந் தெரியவில்லையே?" எனதிகைப்பாள். "இனி இச்சரீரம் எதற்கும் பிரயோசனமில்லை" என்று தன் தேகத்தைப் பகைப்பாள்.

இச்சமயத்தில், "டக்டக்" என்ற குதிரைகள் காலடிச் சப்தங் கேட்டது. சிறிதுநேரம் சென்றதும் நான்கு திருடரங்குவந்து தங்களுக்குச் சமைத்துப்போட அவளைத் தங்களிருப்பிடத்திற் கழைத்தேகினர். துர் எண்ணங்க ளிவர்களுக்குத் தோன்றவேயில்லை. இவர்கள் துர்ச்செய்கைக் குடன்படவுமில்லை".

நண்பரே! இவள் நம் கதாநாயகியின் தாய். இவளது விருத்தாந்தங்களைப் போக போக அறிவீர். பார்வதிக்கு இச்சம்பவம் நேரிடுவதற்கு ஓரைந்து மாதத்திற்கு முன்புதான் அவள் தாய் அக்கானகத்தில் வருத்தப்பட்டாள்.

பகல் சுமார் பன்னிரண்டுமணி இருக்கும். கதிரவன் தன் பராக்கிமமெல்லாங் காட்டி மனிதர் தலைக்கு நேரே நிற்கிருன். ஏரிகளிலுங் குளங்களிலுமுள்ள மச்சங்கள் வெயிலின் உஷ்ணம் பொறுக்கமாட்டாமல் துள்ளித் துள்ளித் தண்ணீரில் விழ்ந்து கொண்டிருந்தன. இவைகளுக்காக அதிக நேரமாய்க் காத்துக்கொண்டிருக்கும் புல்லினங்கள் தங்களுக் ககப்பட்ட மீன்களைத் தின்று கொண்டிருந்தன. தவளைகள் நீரிலிருந்து வெளிப்போந்து வெயிலில் உட்கார்ந்துகொண்டிருந்தன. குளங்களில்செம்படவர் அநேகர்மீன்கள் பிடித்து விட்டு, தங்கள் வலைகளை அலசிக்கொண்டிருந்தனர். பறவைகள் சில வெய்யிலுக்குப் பயந்து மரங்களின் ஒதுக்கிடங்களில் உட்கார்ந்து கொண்டிருந்தன. காகங்களின் கா! கா! என்ற சப்தம் காதுக்கு அருவெறுப்பாயிருந்தது. சில பெண்பிள்ளைகள் தத்தம் மாமன், மச்சான், அண்ணன், தம்பி முதலியவர்கள் கழனிக்குப் போயிருப்பதால் அவர்களுக்குக் கஞ்சிவார்த்தெடுத்துக்கொண்டு போகா நின்றனர்.

பார்வதி இச்சமயத்தில் சத்திரத்துத் திண்ணையி னொருபுறத்தில் நித்திரை செய்துகொண்டிருந்தனள். இது நிற்க.

இரண்டாவ தத்தியாயத்தில் தன் மனைவியோடு விவாகத்தைக் குறித்துப்பேசின தீனதயாள முதலியார் சத்தியபுரி சேர்ந்து, இராமனைக் கண்டு,

"சிவநேச முதலியாரிங்கு இருக்கிறாரா ?" என்று வினவினார்.

இராமன்:—"அவரிங்கில்லை".

தீனதயாள முதலியார்:—எங்கு போயிருக்கிறார் ?

இராமன்:—அவர் துறவியாய்ப் போய் விட்டாரய்யா".

தீனதயாள் முதலி:—அவர் புதல்வி எங்கே ?"

இராமன்:—அவர் புதல்வி எங்கேயோ போய் விட்டபடியினால் தான் சிவநேசமுதலியார் துறவியாய்ப் போக நேர்ந்தது".

தீனதயாள முதலியார்:—அவர் சொத்தெல்லா மெங்கே ?".

இராமன்:—"தன் தமையனுக்குக் கொடுத்துவிட்டார்".

தீனதயாள முதலியார்:—அவராவது இங்கிருக்கிறாரா ?

இராமன்:—"வெளியூருக் கெங்கேயோ போயிருக்கிறார். போய் இன்று இரண்டாகிறது".

"நான் போகிற இடமெல்லா மிப்படி யிருக்கவேண்டுமா ! என்ன துர் அதிர்ஷ்டம்" என்று தீனதயாளமுதலியார் தம் மனத்துள் நினைத்து, அங்கிருந்து புறப்பட்டு சண்பகாவதி நதிக்கரை யடைந்து, ஒரு படகிலேறி முத்தூர் குப்பஞ் சேர்ந்து தனக்காக வெகு நேரங்காத்துக்கொண்டிருக்கும் வண்டியிலேறினார். சிறிது நேரத்திற்குள் இவ்வண்டியு மப்பிராமணன் சத்திரஞ் சேர்ந்ததும் தீனதயாள முதலியார் வண்டியை விட்டுக் கீழே யிறங்கி, "அடே நாகா, வண்டியை அதோ தெரிகிற அந்த ஆலமரத்தடியில் நிறுத்தி, மாட்டை வண்டியிலிருந்து அவிழ்த்து அம்மரத்திற் கட்டி அதற்குவைக்கோல் போடு" என்றுசொல்லி முடித்ததும் சுமார் பதினைந்துவயதுள்ள வாலிப னொருவன் வண்டியை ஒட்டிக்கொண்டுபோய் ஆலமரத்தடியிற் சேர்ந்தான்.

தீனதயாள முதலியாரென்பவர் நரேந்திரபுரத்துப் பிரபு. இவர் புதல்வன் சங்கரனென்பவன் அத்தேசத்தரசனிடம் மந்திரி பட்டம் வகித்தவன். இவனுக்கு வயது சுமார் இருபதிருக்கும். வெகு புத்திசாலி. அழகில் மாரனை வென்றவன். சற்குணன்; சாது, கற்பகக் கொடையான்.

தீனதயாள முதலியார் போஜனமுண்டு சற்று இளைப்பாற, அச்சத்திரத்துத் திண்ணையின்மீது உட்கார வந்ததும், பார்வதியைக் கண்ணுற்று:—

"ஐயரே ! இப்பெண் யார் ?" என்று வினவினார்.

பிராமணன்:—"இப்பெண் சத்திய புரியில் வசிக்கும் சிவநேச முதலியார் குமாரத்தியாம். இவள் தனது சிற்றப்பன் கொடுமையாலிங்கு தனித்திருக்க நேர்ந்தது" என்று பார்வதி அவனுக்குத் தெரிவித்த யாவற்றையுஞ் சவிஸ்தாரமாய்ச் சொல்லி முடித்தான்.

இதற்குள், பார்வதி யாதோ கனவுகண்டு விழித்தெழுந்தாள்.

பிரபு இவளை நோக்கி:—"அம்மா, உன் வரலாற்றை இப்பிராமணன் மூலமாய்க் கேட்டறிந்தேன். மேலும், சத்தியபுரியில் உன் தந்தையைப்பற்றி

விசாரித்ததிலவர் துறவியாய் விட்டதாய்த் தெரியவந்தது. ஆதலால், நீ என்னுடன் வருவதற்கு யாதொரு தடையுமில்லையே ?'' என்றார்.

பார்வதி:— அவர் சொல்வது உண்மையெனத் தெரிந்துகொண்டு, அப்படியே வந்துவிடுகிறேன். இச்சமயத்தில் நீர்தானெனக்குத் தாயுந்தந்தையும்''.

மணியுமிரண்டாயிற்று. தீனதயாள முதலியார் கையைத்தட்டி, "நாகா, வண்டியைக் கொண்டுவா.'' என்றார்.

நாகனும் மாட்டுவண்டியோடு அவரிடத்திற்கு வந்தனன்.

தீனதயாள முதலியார்:—"நீ ஐயர் போடுகிற சாதத்தைச் சாப்பிடு'' என்றார். நாகனுஞ் சாப்பிட்டுத் தயாராயினன். சுமார் பகல் மூன்றுமணியாயிற்று. சூரியன் வெப்பமுஞ் சிறிது தணிந்தது. அப்பிராமணனுக்குப் போய் வருகிறோம்'' என்று சொல்லிவிட்டு, தீனதயாள முதலியாரும், பார்வதியும் வண்டியிலேறினர்கள். "கிணிங், கிணிங்'' என்ற மணியொலியோடு மாடு வண்டியை இழுத்துக்கொண்டு போயிற்று. வண்டியு மொருகாத வழிதூரம் வந்துவிட்டது. சூரியன் மேற்குக் கடலிற் குதித்தான். பிரபுவின் உடல் பூரித்தது. ஆனந்தக் கடலில் மூழ்கினர்.

சுமார் இரவு 8-மணிக்கு இம்மூவரையுங் களிக்க சந்திரன் உதித்தது. வனவிலங்குகள் ஆரவளித்து எழும்பி, "கிணிங், கிணிங்'' என்ற சத்தத்தைக் கேட்டு பயந்து ஓட்டம் பிடித்தன. ஆகாயத்தில் புஷ்பராகங்களைப்பதித்தது போல் "மினுக்கு மினுக்''கென்று நட்சத்திரங்கள் பிரகாசித்தன. மூவரில் ஒருவராகிலுந் தூங்கவேயில்லை. காலை நாலுமணிக்கு வண்டி நரேந்திரபுரஞ் வந்து சேர்ந்தது.

☞ மரகதவேலு முதலியார்.

நமது ஜார்ஜ் சக்கரவர்த்தி.

5-வது ஜார்ஜ் சக்கரவர்த்தி நமது காலஞ்சென்ற எ-வது எட்வர்ட்சக்ரவர்த்தியாரின் இரண்டாவது புத்திரர். முதல் புத்திரர்தான் சிம்மாசனத்துக்குரியவராகையால் ஜார்ஜ்அரசர் மாலுமித்தொழிலைக் கற்றுவர எட்வர்ட்சக்ரவர்த்திவிரும்பினர். அவ்விதமே ஜார்ஜ்அரசர் கப்பற்றொழில்கற்றுக்கொண்டார். அரசன்என்ற கர்வமின்றி சாதாரண மனிதருடன்சேர்ந்து தச்சவேலை, கண்ணான் வேலைமுதலியவைகளையும் கற்றுக்கொண்டு, கப்பல்செய்யும் விதம் கப்பலை எவ்விதம் நடத்துவது முதலியவைகளையும் செவ்வனே கற்றுக்கொண்டார். இப்படிஇவர்செய்ததான துசுறுசுறுப்பாகவும், அநுதாபம், இரக்கமுடையவராகவும், டம்பமின்றியுமிருக்க மிக்க உதவியாயிற்று. இவருடையதமையன் ஆல்பர்ட் விக்டர் இறந்த வுடன் இவர் கப்பல் வேலையைவிட்டு வரவழைக்கப்பட்டார். இவருக்கு இளவரசுபட்டம் சூட்டப்பட்டது. சில காலஞ்சென்றவுடன் காலஞ்சென்ற விக்டோரியா ராணியாரின் மாமாவின் மகளுடைய பெண்ணாகிய விக்டோரியா மேரி என்னும் பெண்ணரசியை மணம்புரிந்தார்.

1901-வது ஷூத்தில் ஆஸ்திரேலியாதேசம் ஒற்றுமையுடன் சேர்ந்திருந்தபொழுது அத்தேசத்து பார்லிமேண்ட் மகாசபையைத் திறக்க நமது காலஞ்சென்ற விக்டோரியா ராணியாருக்குப் பதிலாகச் சென்றூர்.

1905-வது வருடம் தமதுமனைவியாருடன் இந்தியாவிற்கு விஜயஞ்செய்தது யாவருக்கும் தெரியுமல்லவா. அவர் இங்கு தங்கிய காலத்தில் இந்தியாவுக்குரிய உண்மையான விஷயங்களை யறிய தேசாபிமானிகளில் சிலருடன் பேசினூர். க்வாலியர் தேசத்திற்குப்போனபோது அங்கு மகாராஜா அவர்கள் செய்த மரியாதையைப் பெற்றுக்கொண்டு மாத்திரமிராமல் பஞ்சத்தால் வருந்தி அன்னத்திற்குத் தவித்துக்கொண்டிருக்கும் ஜனங்களைப் பார்க்கச் சென்றூர். அங்கு உடம்புஎலும்புடன் ஒருவாய் அன்னத்திற்குத்தவிக்கும்ஜனங்களைக்கண்டு வருத்தமுற்றூர். இவர் இந்தியாவை விட்டுத் திரும்பிப்போகும் பொழுது "இந்தியாவைப்பற்றி அநேக சமாசாரங்களை யறிந்துகொண்டேன், நான்ஒருபொழுதும் இந்தியரைமறக்கவேமாட்டேன்" என்றுசொல்லிச்சென்றூர். இங்கிலாந்துக்கு வந்ததும் லண்டன்மாநகரத்தில் ஒரு பிசங்கம் செய்தபொழுது "இந்தியா இன்னும் மிக்க அநுதாபத்துடன் ஆளப்படவேண்டு" மென்று சொன்னூர். இவ்விதம் நல்லெண்ணம் அமைந்த எ-வது எட்வர்டின் புத்திரராகிய 5-வது ஜார்ஜ் தான் இப்பொழுது நமக்குச் சக்கரவர்த்தி. இவர் நீடூழிகாலம் செங்கோல் செலுத்தி அரசுபுரியுமாறு ஈசன் அருள்புரிவாராக.

☞ பத்திராதிபர்.

சிறுவர்களுக்கானபக்கம்.

1-சோதனை.

இரண்டு வாலிபர்கள் ஓர் நாள், அடர்ந்து படர்ந்து குளிர்ந்து கண்ணுக்குப் பச்சென்றிருக்கும் ஓர் மாந்தோப்பி னருகாமையிற் செல்லுகையில், அத்தோப்பில் திரள் திரளாய்க் கனிந்த மாம்பழங்கள் காய்த்துத் தொங்குவதைக் கண்ணுற்றுப், பின்வருமாறு பேசிக்கொண்டார்கள்.

கிருஷ்ணன்:—அதோபார் கோபாலா! எவ்வளவு அழகாய் மாம்பழம் பழுத்துத் தொங்கிக்கொண்டிருக்கிறது, அதுகளைப் பறித்துத் தின்றூல் எவ்வளவு ருசியாய் இருக்குமோ? பார்க்கப் பார்க்க வாயில் ஜலம் ஊறுகின்றது. ஆருங்காணுமல் ஐந்தாறுபறித்துக் கொண்டுபோய் விடலாம் வருகிறுயா?

கோபாலன்:—இந்த வேளையில் யாரும் இல்லாதிருக்கும் பொழுது பழத்தைப் பறிப்பது கஷ்டமல்ல; ஆனூல் ஊரார் உடைக்குப்பேயாப்ப் பறப்பது போல, ஒருவனுடைய தோட்டத்திற் சென்று திருடுவது நியாய மல்லவே.

கிருஷ்ணன்:—போடா பையித்தியகாரா, பறித்தாலென்ன? என்ன என்னவோ கதைபேசுகிறாயே, இது ஒரு பெரிய காரியமா? எவ்வளவோகாய்த்திருக்கிற மரங்களில் ஐந்தாறு பழங்கள் பறித்து விட்டால் உடையவனுக்கு எப்படித் தெரியப் போகிறது?

கோபாலன்:—உடையவனுக்குத் தெரிந்தாலென்ன தெரியாதே போனுலென்ன, நாம் நினைக்கவேண்டியது அதல்ல; மாம்பழம் பறித்துக் கொண்டு போவது கூடாத காரியம். துரும்பானுலும் பிறருடைய சொத்தை அவரறியாமல் அபகரிப்பது தப்பு. கிருஷ்ணு, உனக்கேன் நான் சொல்வதொன்றும் சரியாகத் தோன்ற வில்லே? மரத்திற்கு உடையவன் நம் இருவரையும் காணுதிருந்தபோதிலும், சற்வகாலமும் நம்முடைய நன்மை தீமைகளைப் பார்ப்பவர் ஒருவர் உண்டென்று உனக்குத்தெரியு மல்லவா? என்முன். மாம்பழத்தைக்கண்டு ஆவல்கொண்டு எவ்விதத்திலாவது அதைப்பறித்துச் சாப்பிடவேண்டுமென்று எண்ணிய கிருஷ்ணன், ஈசுவரன் ஒருவர் நன்மை தீமைகளுக்கு தகுந்தபலன் கொடுப்பார் என்றுசொல்லிய வார்த்தைகளைக் கேட்டு, அவன் நினைத்திருந்த துராசையை சந்தோஷத்துடன் அடக்கி நண்பனைப் பார்த்து, கோபாலா! நீ சொன்னது மெய்தான், இனிமேல் துராசையைக் கனவிலும் நினைக்க மாட்டேன், நாம் அரைவிநாடி கூட இவ்விடத்தில் நிற்க வேண்டாம். போகலாம்வா என்முன்.

இவ்விரு பையன்களுக்கும் நடந்த சம்பாஷணைகளை ஒளித்து நின்று கேட்ட தோட்டக்காரன், திடீரென்று அவர்கள் முன்பாக வந்து, நல்ல மாம்பழத்தில் கொஞ்சம் பறித்து மிகவும் சந்தோஷத்துடன் கோபாலனுக்குக் கொடுத்துப் போயினுன். அதுகண்ட கிருஷ்ணன் மனம் நொந்து பிறர் சொத்தை இச்சித்ததினுல்லவோ தனக்கு இவ்வித அவமானம் நேரிட்டதென்று நினைத்து, வெட்கித் துக்கித்து நிற்க, தனக்குக் கிடைத்த பொருளை இஷ்டர்களுக்கு அன்புடன் பகிர்ந்து கொடுக்கும் குணமுடைய கோபாலன் கிருஷ்ணனுக்கு ஆறுதலான வார்த்தைகள் சொல்லி தேற்றி, மாம்பழத்தை இருவரும் பங்கிட்டுச் சாப்பிட்டார்கள். சிறுவர்களே! நீங்களும் கிருஷ்ணனைப்போ லிராமல், கோபாலனைப் போல நல்ல குண முடையவர்களா யிருக்க முயல வேண்டும்.

2 - பால்லியக் கோளவான சாஸ்திரி.

பிரான்சு தேசத்திற் பிறந்த பீற்றர்கா எஸந்தி என்று பெயருடைய ஒருவன் கல்வியிலும் விவேகத்திலும் தேற்சியடைந்து, இளமையில் ஏழு வயதாயிருக்கையில் இராக்காலங்களில் ஆகாயத்திற் தோன்றும் சோதிகளைக் கவனித்துப் பார்கக மிகவும் ஆவலுடையவனுய், தினந்தோறும் இரவில் வெளியேசென்று சந்திரனையும் மற்றுமுள்ள தாரகா கணங்களையும் பார்த்து வருவது வழக்கம். ஒரு நாள் சூரியன் அஸ்தமித்ததும் நாலைந்து சிறுவர்களுடன் சந்தோஷமாய் உலாவிவரும் பொழுது, பூரணச் சந்திரன் பிரகாசமாய் வெளிச்சத்தைக் கொடுத்துக்கொண் டிருந்தன. வெளுமையான மேகங்கள் காற்றடித்த திக்கை நோக்கி பறந்து போவதைக் கண்டு, அச்சிறுவர்கள் ஆகாயத்தில் ஓடுவது மேகமா அல்லது சந்திரனு என்று, ஒருவருக் கொருவர் தர்க்கிக்கத் தொடங்கினுர்கள். கடைசியாக, மற்றச் சிறுவர்கள் மேகம்

ஓடவில்லை, சந்திரன் தான் ஓடுகின்றது என்று உறுதியாய் ஒத்துப் பேசினார்கள்.

இவை அனைத்தையும் சாந்தமாய் கேட்டிருந்த பீற்றர் என்னும் சிறுவன், நீங்கள் சொல்வது தப்பு, சந்திரன் நின்ற நிலையில் ஓடவில்லை. இவ்வளவு தீவிரமாய்ச் செல்வது மேகம் என்பதாக எவ்வளவு நியாயங்களை எடுத்துக் காட்டியும், மற்றச் சிறுவர்களுக்கு நம்பிக்கை வரவில்லை. பிறகு பின் வரும் உபாயத்தை எடுத்துக் காண்பித்தான். அவர்களை ஒரு விருக்ஷத்தினடியில் கூட்டிக்கொண்டுபோய் மரத்தின் கிளைகளின் இடையிற் காணும் பூரணசந்திரனை நன்றாய் உற்றுப் பார்க்கும்படி சொன்னான். அவர்கள் இமை கொட்டாமல் சந்திரனைப் பார்த்தவண்ணமாய் நின்று, சந்திரன் நிலையிற் நிற்பதையும், கூட்டங் கூட்டமாய் மேகங்கள் அதிவேகமாய் சந்திரனை மறைத்து அப்டால் செல்லுவதையும், திர்ஷ்டாந்த மாகக் கண்டு களித்து, பீற்றர் சொன்னவைக ளெல்லாம் மெய்யென்று ஒப்புக் கொண்டார்கள்.

கல்வியில் பீற்றருக்குள்ள ஆசைக்கு அளவில்லா திருந்தது. தன் இஷ்டப்படி வாசிக்கப் பகல் நாழிகை முப்பதும் போராமல் இரவிலும் வெகு நேரம் வாசித்துக்கொண்டு இருப்பான். பத்தாவது வயதில் இவனுடைய புத்தி நுட்பத்தைக் கண்டு, வியந்துகொண்ட பண்டிதர் ஒருவர் "இச்சிறுவன் பெரியவனாகும் பொழுது கல்வியில் தேர்ச்சியடைந்து யாவராலும் புகழும்படியான உன்னத ஸ்தானத்தை யடைவான்" என்று புகழ்ந்துபேசினாராம். பீற்றர்கா ஸெந்தியினிடத்தில் சிறந்து விளங்கிய கல்விதேற்சிக்கு அவனிடத்தில் விளங்கிய அடக்கம் விசேஷ அலங்காரமா யிருந்தது. "விளைந்த கதிர் வணங்கும், என்றதற் கிணங்க, பெரியவர்கள் தாங்கள் எவ்வளவு கலைகளை கற்றிருந்தாலும், கற்றது கையளவு கல்லாதுலகளவு" என்று பெரியவர்கள் நினைத்து அடக்கமாயிருப்பார்கள்.

☞ எஸ். பொன்னம்மாள்.

மிஸ்டர் A. கோவிந்தராஜுலு முதலியாரின் மனைவியார்.

சென்னப்பட்டணத்தில் மிகவும் கௌரதைப் பெற்ற பெரிய குடும்பத்தில் 1879-ம் ௵ நவம்பர்௴ 11௨ யன்று பெரம்பூரில் இம்மாது பிறந்தார்கள். இம்மாதின் தகப்பனாராகிய காலஞ்சென்ற எ. திருவேங்கட முதலியார் ரெவினியுபோர்ட் ஆபீஸில் லோகல்பண்டு மானேஜராக மாதம் 400-ரூபாய் வாங்கியிருந்தபோது ஜனங்கள் சுய அரசாட்சியில் பயின்று வரவேண்டியதென்று ஆங்காங்கு லோகல் போர்டுகளை ஸ்தாபிக்கவேண்டி முதலில் ஏற்பாடுகள் செய்யுங்காலையில் கவர்ன்மெண்டாருக்கு பேருதவிபுரிந்தார். பிறகு சென்னை முனிசிபல் கமிஷனில் மிகவும் கீர்த்திபெற்ற அங்கத்தினராக 15-வருடகாலம் பொதுஜன நன்மைக்காக மெத்த பிரயாசைப்பட்டார்.

1897-ஆ ஜூன்-மீ 4உயில் தம் அத்தை பிள்ளையாகிய மிஸ்டர் அ. கோவிந்தராஜுலு முதலியார் பி. ஏ. அவர்களை விவாகம் செய்துகொண்டார்கள். 1905-ஆத்தில் தம் புருஷன் சங்கரநாயனார் கோவில் ரேஞ்சு ஸ்கூல் சப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டராக மாற்றப்பட்டபோது அவர்களும் அவ்விடம் போகநேர்ந்தது. சங்கரநாயனார் கோயிலிலிருக்கும்போது "ராஜா பிறந்தநாள்," "பிரிடானிய ராஜ்ஜியம் கொண்டாடும்நாள்" முதலிய முக்கிய நாட்களில் அவ்விடத்திலுள்ள ஸ்திரீகளையெல்லாம் ஓரிடத்தில் ஒன்றாகக் கூட்டி சகோதரிகளாக ஒற்றுமையாயிருக்கும் தன்மையை அவர்கள் மனதில் உதிக்கும்படி செய்ய பிரயத்தனப்பட்டார்கள். அத்தருணங்களில் இந்தியாவில் "பிரிடானியரின் பரிபாலனத்தினாலுண்டாகும் நன்மைகள்," "ஆங்கிலேய அரசாட்சியினால் இந்திய ஸ்திரீகளுக்கு ஏற்பட்ட நன்மைகள்" ஆகிய விஷயங்களைப்பற்றி அந்த ஸ்திரீகளுக்கு நன்கு விளங்கும்படி தமிழ் பாஷையில் உபந்நியாசித்தார்கள்.

இம்மாதின் தெய்வபக்தியோ மிகவும் புகழத்தக்கது. இம்மாது மணி வேலைகளில் மிகவும் தேர்ச்சியடைந்திருந்தமையால், சங்கரநாயனார் கோயிலிலிருக்கும் தூரதேசங்களினின்று பலகோடி இந்துக்கள் வந்து பக்தியுடன் பணியும் கோமதி அம்பாளின் சந்நிதியில் தமக்குள்ள அதிக பக்திக் குறிகுறியாக விசித்திரமான ஒரு விசிறியும் அழகான ஒரு பாக்குமரமும் மணியினால் செய்து அம்பாளின் பள்ளியறையில் வைத்தார்கள். அச்சந்நிதிக்கு தரிசனைக்கு வருபவரெல்லாம் கண்டு களித்து ஆச்சரியப்படுகிறார்கள். இவ்வதிசயமான வேலைகளை அவ்வூரிலுள்ள பெண்களும் ஸ்திரீகளும் பார்த்து பிரமித்து அவ்வேலைகளைச்செய்ய கற்றுக்கொள்ளும்பொருட்டு இந்த அம்மாளிடம் அடிக்கடி போவதுண்டு. தம்மிடம் வந்தவெல்லோருக்கும் பொறுமையுடனும் பட்சத்துடனும் இம்மாது சிரோமணி மணிவேலைகளை கற்பித்து வந்தார்கள். இவ்விதமாக அவ்வூரிலுள்ள பெண்களும் ஸ்திரீகளும் அவ்வித வேலைகற்று அதிக விர்த்தியடையும்படி இவர்கள் மனதில் உற்சாகத்தை யுண்டாக்கினார்கள். மாட்சிமை தங்கிய வேல்ஸ் இளவரசியம்மாள் சென்னையில் விஜயம்செய்தபோது புதிய உன்னதமான ஒரு ஜதை விசிறி மணியினாலேயே தம் கைப்பட பிரயாசப்பட்டு செய்து பிரிட்டிஷ் ராஜாங்கத்தின் பேரில் தமக்குள்ள அன்பு, ராஜவிசுவாசம்,நன்றியறிதலாகிய இவைகளுக்குச் சின்னமாக மாட்சிமை தங்கிய வேல்ஸ் இளவரசி அம்மாளுக்கனுப்ப, அவ்வம்மை கிருபை கூர்ந்து மனமகிழ்ந்து அவைகளை அங்கீகாரம் செய்ததாக, அச்சமயம் சிறப்புற்று கனம் பொருந்திய சென்னை கவர்னர் அவர்களுக்கு அந்தரங்க காரியதரிசியாயிருந்த மிஸ்டர் எல். எம். உன்ச்சு துரையவர்கள் மூலமாக தெரிவித்தார்கள். 1906-ஆத்தில் மதுராபுரியில் நடைபெற்ற கைத்தொழில் கண்காட்சி சாலைக்கு அனுப்பப்பட்ட விசிறிகளுக்காக மெரிட் சர்டிபிகேட் அவர்களுக்கு பரிசளிக்கப்பட்டது. அச்சிறந்த மணிவிசிறிகளை சிறப்புற்று கனம் பொருந்திய லேடி லாலி அம்மாள் சென்னையின்கண் முதலில் ஏகியபோது பிரீதியுடன் பெற்றுக்கொண்டார்கள். 1907-ஆ மார்ச்சுமீ 2உ யன்று சிறப்புற்று கனம் பொருந்திய லேடி லாலி அம்மாள் தம்மைக்காண சென்னை கவர்ன்மெண்ட் அவுஸுக்கு மிஸஸ் கோவிந்தராஜுலு அவர்களை வரும்படிக்கு மிஸ்டர். எம். ஜீ. காம்பெல் மூலமாக அறிவித்தார்கள்.

1908-௵ நவம்பர் மாதத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் கல்வி யபிவிர்த்தி யாகும்பொருட்டு ஜில்லா கலெக்டராக விருந்த மிஸ்டர். எல். எம். உன்ச்சு துரை அவர்களது பேருதவியினால் சங்கரநாயனார் கோயிலில் மிஸ்டர் அ. கோவிந்தராஜுலுமுதலியாரால் முதல் முதல் ஏற்படுத்தப்பட்ட அப்பெரிய அரிய கண்காட்சி சாலைக்கு அனுபந்தமாக பெண்களுடைய கல்வியை விர்த்தி செய்வதற்காக பெண்களாலும் ஸ்திரீகளாலும் செய்யப்பட்ட மணிவேலைகள், தையல் வேலைகள் முதலியவற்றை சேகரித்து மேற்படி கண்காட்சி சாலையில் பெண்களின் பிறிவென்று மிஸ்ஸர்ஸ். கோவிந்தராஜுலு அவர்களேற்படுத்தினார்கள். அப்போது அவர்கள் நேர்த்தியான மணிவேலைகளுக்காக ஒரு வெள்ளிபதக்கமும் சிறந்த தையல்வேலைகளுக்காக ஒரு வெள்ளிபதக்கமும் மிஸ். காரப்பியட் அவர்களால் மிஸ்ஸர்ஸ். கோவிந்தராஜுலுக்கு பரிசளிக்கப்பட்டது.

1908-௵ டிசம்பர்மீ த்தில் தென் இந்திய தேசாப்பியாச சங்கத்தாரால் சென்னையில் ஸ்தாபிக்கப்பட்ட கைத்தொழில் கண்காட்சி சாலையில் இம்மாதின் மேன்மையான மணிவேலைகளை மெச்சி முதல்தர மெரிட் சர்டிபிகேட் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது.

சங்கரநாயனார் கோயிலில் தாம் ஏற்படுத்திய பெண் கண்காட்சிசாலையை எல்லோருக்கும் திருப்திகரமாக பூர்த்திசெய்யும்பொருட்டுஅநேக ஸ்திரீகளினின்றும் பெண்களிடமிருந்தும் கைத்தொழில் வேலைகளை குவிப்பதிலும் தம் சாமர்த்தியத்தை ஸ்தாபிக்கும் பொருட்டு அருமையுள்ள அழகிய புதிய மணிவேலைகளை செய்வதிலும் அளவின்றி அதிக கஷ்டப்பட்டதினால் தேகம் மிகவும்அலுப்புற்று பெண்கண்காட்சிசாலை திறக்கப்பட்ட தினமாகிய 1908-௵ நவம்பர்மீ 19உ யன்றே முதுகு நடு எலும்பில் பொறுக்க முடியாத பாதை அவர்களுக்குண்டாகி அது முதல் படுக்கையிலிருந்து வேண்டிய சிறந்தமணி, மந்திர, ஔடதமுதலாகிய சிகிச்சைகளால் யாதொரு சுகமடையாமல் நாளுக்குநாள் க்ஷீணதிசையடைந்து ஒருவருஷகாலமாய் வருத்தமுற்றுநாளது 1910௵ எப்பரல்மீ 12உமாலை 7-மணிக்கு எழும்பூரில் தம தருமையான ஐந்து வயதுள்ள குமாரனும் ஒன்பது வயதுள்ள செல்வகுமாரத்தியும் பிரியநாயகனும் இன்னும் மற்ற பந்துக்களும் துக்கசாகரத்தில் அமிழும்படி உயிர் நீங்கினார்கள். தாம் கைக்கொண்ட காரியத்தில் காண்பித்த ஊக்கததினாலும், பெருந்தன்மையான குணத்தினாலும் கூர்மையுள்ள புத்தியினாலும் மேன்மையான மரியாதையினாலும் சங்கரநாயனார்கோயிலுள்ள ஸ்திரீகளுக்கு ஓர் நாயகமாயிருந்து அவர்களுக்கெல்லாம் அத்யந்த பிரியமுள்ளவர்களானார்கள். சுறிக்கிச்சொல்லில் எல்லாவிஷயங்களிலும் அவர்களுடைய நடை, உடை, பாவனைகள் மாதர்கள் கண்டு கற்றுக்கொள்ளத்தக்கவைகளாயிருந்தன. அவர்களது அகாலமரணத்தினால் இந்திய ஸ்திரீகள் சீர்திருத்தமடைந்து சிறப்படைய வேண்டு மென்கிற சிரத்தைமனதிடம் சதாகொண்டிருந்த ஓர் சகோதரியை இநதியமாதர்கள் இழந்தார்களென்று இயம்பவும் வேண்டுமோ.

☞ ஓர் அனுதாபி.